பக்கங்கள் எட்டு
விலை ரூபா 5-00
Registered as a News Paper in SriLanka

# வலம்புரி
VALAMPURI

அசல் 22 கரட் தங்க நகைகளுக்கு யாழ் நகரில் சிறந்த ஸ்தாபனம்
அர்ச்சனா ஜுவலர்ஸ்
118, கஸ்தூரியார் வீதி,
176/1, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
(கி-2127)

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 ஆனி 13 புதன்கிழமை (27-06-2001) தொலைபேசி: 3378 ஒலி: 193

## நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை தோற்கடிக்க அமைச்சர்கள் தலைமையில் நான்கு குழுக்கள்

### நேற்றைய ஆலோசனைக் கூட்டத்தில் முடிவு

ஐக்கிய தேசியக்கட்சி கொண்டுவரவுள்ள நம்பிக்கையில்லாத்தீர்மானத்தை தோற்கடிப்பது குறித்து பொதுஜன ஐக்கிய முன்னணி அரசின் சிரேஷ்ட அமைச்சர்களுடன் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா ஆலோசனை நடத்தியுள்ளார்;

இவ் ஆலோசனைக்கூட்டம் நேற்று ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையில் நடைபெற்றுள்ளது இக் கூட்டத்தில் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசில் 15 சிரேஷ்ட அமைச்சர்கள் கலந்து கொண்டனர். இக் கூட்டம் இரவு ஏழு மணி முதல் நள்ளிரவு ஒரு மணி வரை நீடித்தது.

இக் கூட்டத்தில் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கா அமைச்சர்கள்டி. எம். ஜயரத்தின, அலவிமௌலான ஆகியோரும் கலந்து கொண்டனர். நம்பிக்கை இல்லத் தீர்மானத்தை தோற்கடிப்பதற்கு அமைச்சர்கள் மட்டத்தில் நான்கு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது. இக் குழுக்கள் நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை தோற்கடிக்கும் வகையில் செயற்படவுள்ளன;

நம்பிக்கை இல்லாத் தீர்மானத்துக்கு எதிராக வாக்களிப்பதற்கு எதிராகப் பாராளுமன்ற உறுப்பினர்களைதம் வசம் இழுக்கும் தந்திரோபாயங்களை இக்குழுபிரயோகிக்கவுள்ளது.

### மாணவிகளை காணவில்லை

வவுனியாவிலுள்ள பிரபல பெண்கள் கல்லூரியைச் சேர்ந்த, மூன்று மாணவிகளை நேற்று முன் தினம் முதல் காணவில்லையென்று மாணவிகளின் பெற்றோரால் வவுனியா மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த திங்கட்கிழமை பாடசாலைக்குச் சென்ற கிருஷ்ணபிள்ளை நிலிஜா (வயது-12) கிருஷ்ணபிள்ளை கிருபாலினி [வயது-14]: ஆகிய இருசகோதரிகள் உட்பட ஜெயகாந்தன் தர்சிகா [வயது-10] ஆகிய மூவருமே இதுவரை வீடு திரும்பவில்லையென முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது; [இ]

★ புலிகள் மீதான தடை நீக்கம் ★ யுத்தநிறுத்தம் ★ பேச்சுவார்த்தை

# ரெலோவின் நிபந்தனையை அரசு ஏற்றால் ஆதரவு வழங்கத் தயார்!

## வினோதலிங்கம் எம். பி. அறிவிப்பு

(வவுனியா நிருபர்)

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் அரசுபேச வேண்டும், அதற்கு வசதியாக அவர்கள் மீதான தடையை நீக்கி, யுத்தநிறுத்தம் செய்ய வேண்டும். 3 கோரிக்கைகளையும் பொதுஜன ஐக்கியமுன்னணி அரசுஏற்றுக்கொண்டுஅதனைநடைமுறைப்படுத்துமானால்அரசிற்கு ஆதரவு வழங்குவோம் என்று வன்னி மாவட்ட ரெலோ எம்பி வினோதலிங்கம் வவுனியாவில்இடம்பெற்றதிறப்பு விழாவில் பேசும் போது குறிப்பிட்டுள்ளார்.

வவுனியாவில் தேசிய இளைஞர் மன்றத்தின் இளைஞர் வலுவூட்டல் ஒன்று தேசிய இளைஞர் விவகார பிரதி அமைச்சர் பியந்தரஜயரத்தினவினால் நேற்று திறந்து வைக்கப்பட்டது. இவ்வைபவத்தில் கலந்து கொண்ட ரெலோ எம். பி வினோதலிங்கம் மேற் கண்டவாறு கருத்து வெளியிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், கூறியதாவது

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசை வீழ்த்தி விட்டு ஐக்கிய தேசியக் கட்சியை

(8ஆம் பக்கம் பார்க்க)

## ரவூப் ஹக்கீமை தாம் சந்திக்கப் போவதில்லை

### பேரியல் அஷ்ரப் தெரிவிப்பு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமை தாம் ஒருபோதும் சந்திக்கப்போவதில்லையென பேரியல் அஷ்ரப் உறுதிபடத் தெரிவித்துள்ளார்.

கட்சியின் தவிசாளர் பதவி ஏற்பது தொடர்பாக இருவருக்கும் இடையில் ஏற்பட்ட கருத்துவேறுபாடு உச்சநிலை அடைந்து வருவதையே பேரியல் அஷ்ரப்பின் மேற்கண்ட கூற்று தெரிவிப்பதாக அரசியல் அவதானிகள் பலரும் கருத்து வெளியிட்டுள்ளனர்;

இதேவேளையில் நேற்று இடம்பெற்ற ஒரு கூட்டத்தை

(8ஆம் பக்கம் பார்க்க)

## ஐ. சி. ஆர். சி. மூலமாக சடலங்கள் ஒப்படைப்பு

(யாழ்ப்பாணம்)

இருவேறு சம்பவங்களில் மரணமடைந்ததாக, யாழ். போதனாவைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டிருந்த மூன்று இளைஞர்களின் சடலங்களும் நேற்றுக் காலை 9.30 மணியளவில் குடாக்கடல் ஊடாக எடுத்துச் செல்லப்பட்டு பள்ளிக்குடாவில் வைத்து விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்கப்பட்டது.

கடந்த வெள்ளிக்கிழமை திருநெல்வேலிப் பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் பலியான இரு இளைஞர்களின் சடலங்களும், மறுதினத்

(8ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் தடையை நீக்குவதில் ஐ.தே.கட்சிக்கு உடன்பாடில்லை

### மகிந்த சமரசிங்க எம்.பி.தெரிவிப்பு

[கொழும்பு]

புலிகள் மீதான தடை நீக்கப்படுவது குறித்து ஐக்கிய தேசியக்கட்சி ரெலோ இயக்கத்துடன் எந்தவித உடன்படிக்கையையும் செய்யவில்லை என்று ஐ: தே கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார். ரெலோவின் நிபந்தனை எதையும் ஐ. தே கட்சி ஏற்றுக்கொள்ளவில்லை. எனினும் அரசாங்

(8-ம் பக்கம் பார்க்க)

# நிபந்தனையற்ற பேச்சுக்கு அரசு தயார்

# புலிகள் மீதான தடை நீக்கப்படமாட்டாது

## அமைச்சர் டி. எம். ஜயரத்தின அறிவிப்பு

விடுதலைப்புலிகள் மீது விதிக்கப்பட்டுள்ள தடையில் எதுவிதமான மாற்றமும்செய்யப்படமாட்டாது எனபொதுஜனஐக்கிய முன்னணியின் பொதுச்செயலாளரும்அமைச்சருமான டி. எம். ஜயரத்தின தெரிவித்துள்ளார்.

நிபந்தனையற்ற பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க அரசாங்கம் தயாராகவுள்ளது. புலிகள் பேச்சுவார்த்தைக்கு வந்த பின்னரே அவர்களது கோரிக்கைகள் தொடர்பாக ஆராயப்படுமென்றும் அவர் உறுதிபடத் தெரிவித்துள்ளார்.

அரசியற்கட்சிகளுடன் கலந்தாலோசித்தபின்பே விடுதலைப்புலிகள் மீதான தடை நீக்கம் பற்றி பரிசீலிக்கப்படும் என்றும் அமைச்சர் ஜயரத்தினாமேலும் தெரிவித்துள்ளார்; [ந-5]

### எரிக்சோலின் பெயரில் நிலையம்

கிழக்குப்பல்கலைக்கழகத்தால் நடத்தப்படும் கண்காட்சியையொட்டி பல்கலைக்கழக மாணவர்களால் அமைக்கப்பட்ட குளிர்பான விற்பனை நிலையத்திற்கு ''எரிக்சோல் ஹெய்ம் தாக சாந்தி நிலையம்'' எனப் பெயர்சூட்டியிருந்தனர். (ந-8)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சொக்கர்கடையில் திருட்டு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கைலாசபிள்ளையார் கோவில் வடக்கு வீதியிலுள்ள சொக்கர் தேநீர்க் கடையில் கடந்த ஞாயிறு இரவு பல ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்கள் களவாடப்பட்டுள்ளது.

இக்கடைக்கு அருகிலுள்ள பலசரக்குக் கடையிலும் கள்வர்கள் தம் கைவரிசையைக் காட்டியுள்ளனர்.

இதேவேளை இக்கடைகளுக்கு மிக அண்மித்ததாக கோவிலுக்கு முன்பகுதியில் இராணுவக் காவலரண் இருப்பதும் குறிப்பிடத்தக்கது. (ந)

## இளைஞன் கைது

(யாழ்ப்பாணம்)

கடந்த 23 ஆம் திகதி அல்வாய் இன்பருட்டிப்பகுதியில் வைத்து திருஞானசம்பந்தப்பிள்ளை திலகராஜன் (வயது 24) என்ற இளைஞனை இரவு 11.00 மணியளவில் படையினர் கைது செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இவர் கைது சம்பந்தமாகப் பெற்றோர்கள் பருத்தித்துறையில் உள்ள ஈ.பி.டி.பி. காரியாலயத்தில் முறைப்பாடு செய்துள்ளனர். (ந-10)

## "ஆம்" இயக்கம் அங்குரார்ப்பணம்

(கொழும்பு)

சிறுவர்களின் உரிமையைப் பாதுகாக்கவும் விருத்தி செய்யவும் "ஆம்" சிறுவர் இயக்கத்தை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா அங்குரார்ப்பணம்செய்து வைத்துள்ளார்.

நேற்றுமுன்தினம் ஜனாதிபதி மாளிகையில் இடம் பெற்ற வைபவத்தில் இதற்கான உறுதிப்பத்திரத்தில் ஜனாதிபதி கைச்சாத்திட்டுள்ளார். (ந-52)

## கைதடிப் பிரதேச தொண்டர் ஆசிரியர் நிரந்தர நியமனம் உறுதிப்படுத்தப்பட்டது

(யாழ்ப்பாணம்)

கைதடிப் பகுதியில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் முகமாக 1998 ஆம் ஆண்டுக்கு முன்பிலிருந்து தொண்டர் ஆசிரியராக கடமையாற்றியவர்களை தொடர்ந்தும் பணியாற்றும் படி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

இதற்கமைய 1998 ஆம் ஆண்டுக்கு முன்பிலிருந்து தொண்டர் ஆசிரியராகக் கடமையாற்றி தற்போது இடம்பெயர்வு காரணமாகப் பாடசாலைகள் இன்றி தமது ஆசிரியர் சேவையில் இணைந்து கொள்ளாதவர்கள் மீண்டும் தொண்டர் ஆசிரியராகப் பணியாற்றவுள்ளனர்.

இவ்வாறு பணியாற்றும் தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் உறுதி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அமைச்சர் டக்ளஸ் தெரிவித்துள்ளார்.

வடக்கின் அபிவிருத்திபுனர்வாழ்வு, புனரமைப்புமற்றும் வடக்கு-கிழக்கு தமிழ் விவகாரங்கள் அமைச்சின் யாழ். அலுவலகத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெற்ற கைதடிபிரதேச மக்களின் மீள்குடியேற்ற நடவடிக்கைகளின் மீளாய்வுக் கூட்டத்தில் இவ்விடயம் உறுதிப்படுத்தப்பட்டது.

கூட்டத்தில் அரச அதிபர் க. சண்முகநாதன், மேலதிக அரசாங்க அதிபர் து. வைத்திலிங்கம், கைதடிப் பிரதேச இராணுவ அதிகாரி மேஜர் வசந்த, வலயக் கல்விப்பணிப்பாளர், கோட்டக்கல்வி அதிகாரி, வடபிராந்தியப் போக்குவரத்து சபையின் பொதுமுகாமையாளர், சாவகச்சேரிப்பிரதேசசெயலர், யாழ் செயலக அதிகாரிகள், கைதடிப் பிரதேச பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், கிராம அலுவலர்கள் ஆகியோரும் கலந்து கொண்டார்கள்.

இக்கூட்டத்தில் கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் உள்ள ஆசிரியர் பற்றாக்குறையை நீக்குவதற்காக, பாடசாலை பெற்றோர் ஆசிரியர் சமூகத்தினரால் நியமிக்கப்பட்டுள்ள தொண்டர் ஆசிரியர்களுக்கும் விசேட ஊக்குவிப்பு வழங்க உதவுவதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார். (உ)

## தொடரும் துன்பங்களுக்கு முடிவு கட்ட மக்கள் சக்தி எம்முடன் இணைய வேண்டும்

### டக்ளஸ் வேண்டுகோள்

(திருகோணமலை)

வடக்கு-கிழக்கில் உள்ள மக்களின் பிரச்சினைக்கு தீர்வு காண வடக்கு-கிழக்கு மாகாணத்துக்கு அரசியல் தலைமைத்துவம் தேவை. இதே வேளை இதனைக் கருத்திற் கொண்டு ஈ.பி.டி.பி அமைப்பைப் பலப்படுத்துவது ஒவ்வொருவரினதும் தார்மீகப் பொறுப்பாகும் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா திருமலையில் புதிதாக அரசாங்கப் பணிகளுக்காக நியமனக்கடிதங்கள் பெற்றுக் கொள்ள வந்திருந்தவர்கள் மத்தியில் உரையாற்றுகையில் தெரிவித்துள்ளார்.

ஈ.பி.டி.பியின் திருமலை மாவட்ட தலைமைச் செயலகத்தில் அமைப்பாளர் புஷ்பராசா தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் அமைச்சர்டக்ளஸ்தேவானந்தாவின் விசேட ஏற்பாட்டில் அலுவலகப் பணியாளர்கள், இலிகிதர்கள். தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், கணனி இயக்குநர்கள் ஆகிய பதவிகளுக்கு நியமனக் கடிதங்களை அமைப்பாளர் புஷ்பராசா வழங்கியிருந்தார்.

புதிதாக நியமனம் பெற்றவர்கள் மாகாணக்கல்வி அமைச்சு நீர்ப்பாசனத் திணைக்களம் பிரதம செயலாளர் அலுவலகம் கட்டடத் திணைக்களம் மாகாணப் பொது நிர்வாக உள்ளூராட்சி கூட்டுறவுகிராமியஅபிவிருத்தி வீதி அபிவிருத்தி கைத்தொழில் அமைச்சு ஆகிய அலுவலகங்களில் பணியாற்ற உள்ளனர்.

நியமனக் கடிதங்களைப் பெற வந்திருந்தவர்கள் மத்தியில் அமைச்சர் தொடர்ந்து உரையாற்றுகையில்;

மக்களாகிய உங்களுடன் 1990 லிருந்து இன்றுவரை நின்று செயற்படுகின்றோம். இன்றைய காலகட்டத்தில் போரின் கொடுமைகளால் வாடிய மக்களைக் கண்டு, வாடிய பயிருக்கு நீர் ஊற்றுவது போல மக்கள் துயர் துடைப்பதே எமது பணியாகும் இன்று எமது மக்கள் நாளாந்தம் சொல்லொணா துன்பங்களை அனுபவித்து வருகின்றார்கள் இவற்றுக்கு முடிவுகாண உங்களைப் போன்றவர்கள் எம்முடன் இணைந்து சேவையாற்றுங்கள் எனத் தெரிவித்துள்ளார். (உ)

## ஜனாதிபதியுடனான சந்திப்பில் கல்முனை மாவட்டம்பற்றி எதுவும் பேசப்படவில்லை

### ரவூப்ஹக்கீம் அறிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதிக்கும் தமக்குமிடையே நடைபெற்ற பேச்சுக்களின் போது ஜனாதிபதி கூறுவதுபோல கல்முனை நிர்வாக மாவட்டம் பற்றி எதுவும் பேசப்படவில்லை என்று முஸ்லிம் காங்கிரஸ்தலைவர் ரவூப் ஹக்கீம் அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி கல்முனை நகர சபையை மாநகர சபையாக உயர்த்துவது பற்றி குறிப்பிட்டாராயினும், அதுபற்றிநான் எதுவும் பேசாதிருந்துவிட்டேன். எனக்கும் திருமதி அஷ்ரப்புக்குமிடையிலான பூசல்களைத்தீர்த்து வைக்கும் மத்தியஸ்தராக ஜனாதிபதி செயற்படமுன்வந்தாபோதும் நான் அதனை நிராகரித்துவிட்டேன் என்றும் அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (ந)

## அக்குறணை வைத்தியசாலை வளவில் இரு சடலம் புதைப்பு

(கட்டுகஸ்தோட்டை)

அக்குறணை மாவட்ட வைத்திய சாலைவளவில் இரு சடலங்கள் புதைக்கப்பட்டுள்ளதாக கட்டுகஸ் தோட்டை பொலிஸ் பொறுப்பதிகாரி ஆனந்த லேனவ தெரிவித்துள்ளார்.

பொலிஸாருக்கு கிடைத்த முறைப்பாட்டை அடுத்து குறித்தஇடத்தில பொலிஸார் தேடுதல் நடத்தினர் இதன் போது இருசடலங்கள்புதைக்கப்பட்டிருப்பது கண்டு பிடிக்கப்பட்டது.

இச்சடலத்தில் ஒன்றுதமிழருடையதென அடையாளம் காணப்பட்டுள்ளது. இதனை அடுத்து அந்த இடத்திற்கு பொலிஸ்பாதுகாப்பு வழங்கப் பட்டுள்ளது.

சடலங்கள் புதைக்கப்பட்டு ஒருவருடமாகியுள்ளதாகவும், அடுத்த கட்ட நடவடிக்கைகளை மேற் கொள்ள நீதி மன்ற உத்தரவை எதிர் பார்த்திருப்பதாகவும் பொலிஸ் பொறுப்பதிகாரி ஆனந்த லேனவ தெரிவித்துள்ளார். (ந-5)

## துர்க்காதேவி பெண்கள் தொண்டர் சபையின் 20 ஆவது ஆண்டுவிழா

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை துர்க்கா தேவி பெண்கள் தொண்டர் சபையின் 20 வது ஆண்டு நிறைவு விழா எதிர் வரும் 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு ஸ்ரீ துர்க்கா தேவி அன்னபூரணிமண்டபத்தில் சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி தலைமையில் இடம் பெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் வலய பிரதிக்கல்விப்பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதனும், சிறப்பு விருந்தினராக வலிகாமம் வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி கோகிலா மகேந்திரனும் கலந்து கொள்ளவுள்ளனர்.

கடந்த 20 வருடங்களாக தொண்டர்சபையின் உப தலைவராகப் பணிபுரிந்து தற்போது வலி வடக்கு பிரதேச சபைத்தலைவராக விளங்கும் திருமதி பாலாம்பிகை ஸ்ரீ பாஸ்கரனை கௌரவிக்கும் நிகழ்வும் அன்று இடம் பெறவுள்ளது. (உ)

## சமய சொற் பொழிவு

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி அருள் மிகு செல்லக்கதிர்காம கோவில் வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு தினமும் மாலை 7.00 மணிக்கு புத்தூர் ஸ்ரீ சோமஸ் கந்தக் கல்லூரி ஆசிரியர் ச. லலீசன் சமய சொற்பொழிவாற்றி வருகின்றார். (செ)

## ஆத்மீக உரை

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்தில் ஆனி உத்தர திருவிழாவை முன்னிட்டுநாளைவியாழக்கிழமை "பிச்சுத் தரும் பெருமான்" என்னும் தலைப்பில் வி. தெய்வேந்திர ஐயரின் ஆத்மீக உரை இடம்பெறவுள்ளது.

தொடர்ந்து பருத்தித்துறை ஸ்ரீராமகிருஷ்ணசாரதாசேவாச் சிரமத் தலைவர் சுவாமி சித்ரூபானந்தா ஆத்மீக உரை நிகழ்த்துவார். (செ-52)

## ஞானச்சுடர் இதழ் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையினரின் மாதாந்த வெளியீடான "ஞானச்சுடர்" மாத இதழின் ஜூன்மாத இதழ் வெளியீடு நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 10 30 மணிக்கு சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இவ்வெளியீட்டுரையை சிறுப்பிட்டிகிராம உத்தியோகத்தர்க. ஸ்ரீஸ்கந்தராசாவும் மதிப்புரையை புத்தொளி ந. சிவபாதமும் நிகழ்த்துவார்கள். (செ)

## லியோக்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் லியோ கழகத்திற்கான, லியோ சின்னமும், ஆவணங்களும் நீண்ட காலத்திற்குப் பின கிடைத்துள்ளதாக லியோக் கழகத்தினர் அறிவித்துள்ளனர்.

கடந்த 8 வருடகாலமாக இச் சின்னங்கள் கிடைக்காமையால் விதிமுறைகளுக்கு மாறாக பிளாஸ்ரிக் சின்னமே வழங்கப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

இச் சின்னங்கள் கிடைத்த பின்பே சட்டப்படி லியோ கழகம் இயங்க முடியும் என்பதால் எதிர்வரும் 4 ஆம் திகதி புதன் கிழமை புதிய லியோக்களுக்கான சின்னஞ்சூட்டும் நிகழ்வு இடம்பெறவுள்ளது. (உ)

## இராசி பலன்

27/6/2001
(ஆனி 13, புதன்)
சப்தமி பி.இ 2.23 வரை
பூரம் மு.ப 10.13 வரை
ராகுகாலம் 11.55 - 1.25
நல்லநேரம் 4.25 - 5.55
அமிர்தம்

**மேடம்**
நீண்ட நாள் பிரச்சினை தீரும், முயற்சி நன்மை, அமைதிக் குறைவு, வியாதி.

**இடபம்**
அற்பர் உறவு, திடீர் பண வரவு, மனப்பதட்டம், காரிய தாமதம்.

**மிதுனம்**
பிரயாணம், காரிய சித்தி. சகோதரர் உதவி, புதிய அறிமுகம்.

**கடகம்**
வாக்கு வாதம். முயற்சி கைகூடும், சுப நிகழ்வு, பண விரயம்.

**சிங்கம்**
பெரியோர் மதிப்பு, கற்பனை மிகுதி, தேக சுகம், முயற்சி கைகூடும்;

**கன்னி**
காரிய அலைவு, நித்திரைக் குறைவு பொருள் விரயம், மனக்கிலேசம்,

**துலாம்**
பெருமையான செயல். தொழில் சிந்தை, காரிய ஜெயம், குடும்ப சுகம்.

**விருச்சிகம்**
பணியாளர் உதவி, புதிய செய்தி, அதிகாரம், தொழில் மேன்மை.

**தனுசு**
மனப் பதட்டம், உதர பீடை. இடமாற்றம், முயற்சி தாமதம்;

**மகரம்**
நண்பர்கள் விரோதம், பிரயாண பயம், போசன சுகம், வியாதி.

**கும்பம்**
வாகனவசதி, கௌரவம், திடீர் சந்திப்பு, காரியம் கைகூடும்.

**மீனம்**
பகைவரால் நன்மை, மன மகிழ்ச்சி, உடல் நலம், முயற்சி விருத்தி;

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.)

வளவன்

## வருடாந்த மஹோற்சவம

(ஏழாலை)

மல்லாகம் கோட்டைக்காடு அருள்மிகு சாலையம்பதி முருகன் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

தொடர்ந்து பதினொரு தினங்கள் உற்சவம் நடைபெறும்.

உற்சவகாலங்களில் தினமும் மாலையில் வ. குமாரசாமி ஐயரின் சமய சொற்பொழிவும் நடைபெறவுள்ளது. (செ-12)

### சுதந்திர பத்திரிகையாளர்களை

# புலிகளின் உளவாளிகள் எனவீண் பழிசுமத்துவது நிறுத்தப்பட வேண்டும்

## ஆட்சேபிக்கிறது ஆர். எஸ். எவ் அமைப்பு

(கொழும்பு)

ரி. சிவராம், வசந்தராஜா ஆகியோர் மீது பத்திரிகையாளர்கள், ஊடகத்துறையைச் சார்ந்தவர்கள் சிலர் புலிகளின் உளவாளிகளாக அவர்கள் செயற்படுவதாகக்குற்றம் சாட்டி வருகின்றனர்.

சுதந்திர பத்திரிகையாளர்களுக்கு எதிராக இத்தகைய பயமுறுத்தல் நடவடிக்கைகளில் ஈடுபடுவது நிறுத்தப்பட வேண்டும்.

எல்லைகளுக்கு அப்பால் செயற்படும் செய்தியாளர் அமைப்பு (ஆர்.எஸ்.எவ்) தகவல் ஊடகத்துறை அமைச்சர் அனுரா பிரிய தர்ஷன யாப்பாவுக்கு அனுப்பி வைத்துள்ள ஆட்சேபக கடிதத்தில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அக்கடிதத்தில் மேலும், இவ்வாறான வீண் குற்றச்சாட்டுக்களைச் சுமத்திய பத்திரிகையாசிரியர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

புலிகளுடன் பத்திரிகையாளர்களை இணைத்துப் பேசுவதால்அவர்களின் தனிப்பட்ட வாழ்க்கை மோசமாகப் பாதிப்படைகிறது.

யாழ்ப்பாணச் செய்தியாளர் மயில்வாகனம் நிமலராஜன் சுட்டுக்கொலை செய்யப்படுவதற்கு முன்னர் புலிகளுடன் தொடர்புள்ளவர் என்றே பிரசாரம் செய்யப்பட்டு வந்தது என்று சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை, பத்திரிகையாளரைப் பாதுகாக்கும் கமிட்டி(சி பி ஜே)இன்பணிப்பாளர் ஆன் கூப்பர், அரச ஊடகத்தினரின் நச்சுத் தனமானதும், ஆதாரமற்றதுமான குற்றச்சாட்டின் விளைவாக சிவராமினதும் அவரது குடும்பத்தினரினதும் உயிர்களுக்கு தீங்குவிளைவிக்காமல் ஜனாதிபதி உத்தரவாதமளிக்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டுள்ளார்.

ஸ்ரீலங்காவின் அரசு ஒரு போதும் பத்திரிகையாளர்களுக்கெதிரான தாக்குதல்களைத் தடுப்பதில்லைஎனவும் இதற்கு கடந்த ஒக்டோபரில் நிமலராஜனுக்கு நடந்தவை நல்ல உதாரணம் எனவும் கூப்பர் ஜனாதிபதிக்கு கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். (உ)

## சங்கொழங்கு

### பஸ்நிலைய சோதனையை நயினை பக்தர்களுக்கு விலக்குக

21.06 2001 இற்குமுன்னர் நயினை நாகபூஷணி அம்பாள் ஆலயத்திற்கு வருகை தரும் அடியவர்கள்வருடாந்த மஹோற்சவத்திற்கு யாழ் பஸ் நிலையத்தில் பஸ் ஏறி அல்லைப்பிட்டியில்பாஸ் எடுத்துக் கொண்டு நயினாதீவிற்கு வருவது வழமையான நடைமுறை. வருடாந்த மஹோற்சவ காலங்களில் பெரும் எண்ணிக்கையான அடியவர்கள் வருவதால் காலதாமதம் வீண் சிரமங்கள் ஏற்படும் என்பதால் யாழ் பஸ் நிலையத்திலோ அல்லது யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கிலோ சோதனையை முடித்து பாஸ்வழங்கி பஸ்ஸில் பிரயாணிகளைஏற்றிகுறிகாட்டுவான் வரை ஒரு இடத்திலும் பிரயாணிகளை இறக்காமல் பிரயாணம் மேற்கொண்டால் கால தாமதத்தையும் வீண் சிரமத்தையும் தவிர்க்கலாம். என்பதே மனிதாபிமான நடையாகும்

சொல்லொன்று செயல் ஒன்றாக வழமையான நாட்களில் நடைபெறுவதை விட 21.6.2001 இல்இருந்துயாழ். பஸ்நிலையத்தில் வைத்து யாத்திரீகர்கள் உடற் பரிசோதனை,செய்யப்பட்டு பஸ்ஸில் ஏற்றப்பட்டு வழமை போல் அல்லைப்பிட்டியில் இறக்கப்பட்டு வழமையான சோதனை, பாஸ் வழங்கப்பட்டு வழமையான சோதனைச் சாவடிகளில் அதாவது நயினைதீவிற்குவரும்பொழுது புங்குடுதீவு மடத்து வெளியிலும் யாழ் செல்லும்பொழுது வேலணைத்துறையிலும் அல்லைப்பிட்டி, பண்ணை இவற்றிலும் இறக்கி ஏற்றப்படுகின்றனர் மேலதிக சலுகையை எதிர்பார்த்த நயினை யாத்திரீகர்கள் தற்போது வழமையை விட யாழ் பஸ் நிலையத்தில் உடற் பரிசோதனைக்கும் உள்ளாக வேண்டிய, மேலதிக சோதனையை எதிர் நோக்க வேண்டியுள்ளது மஞ்சம், சப்பறம், தேர், தீர்த்தம், தெற்போற்சவம் ஆகிய திருவிழாவிற்கு பெரும் தொகையான அடியவர்கள் வருவார்கள் என்பதால் யாழ். பஸ் நிலையத்தில் இருந்து பிரயாணிகள் வழமைபோல் பஸ் ஏறவிட்டால் அதுவே போதுமானது. யாருடன் நோவது யார்க் கெடுத்துரைப்பது.

நயினை
நா.கோபாலகிருஷ்ணன்

## மண்ணின் மலர்கள் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக தமிழ் மன்றத்தினரின் ஏற்பாட்டில், ''மண்ணின் மலர்கள்'' என்னும் சிறுகதை தொகுப்பு நூல் வெளியீடு இன்று பி.ப 2.30 மணிக்கு யாழ் பல்கலைக்கழக கைலாசபதி கலை அரங்கில் நடைபெறவுள்ளது. (உ-6)

## வருடாந்த மஹோற்சவம்

(புலோலி)

தென் புலோலி புற்றளை சித்தி விநாயகராலய வருடாந்த மஹோற்சவம் நேற்று செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது.

4ஆம் திகதி தேர்த்திருவிழாவும், 5ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும், 6ஆம் திகதி பூங்காவனத் திருவிழாவும் நடைபெறவுள்ளன. (செ-52)

# முன்பள்ளி பாடசாலைகளை அரசு பொறுப்பேற்க மாட்டாது

## கல்வியமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் உள்ள முன்பள்ளிப் பாடசாலைகளை அரசாங்கம் ஒருபோதும் பொறுப்பேற்க மாட்டாது என கல்வியமைச்சர் சுசில் பிரேம் ஜயந்த வலியுறுத்தித் தெரிவித்துள்ளார்.

ஆனால் இம் முன்பள்ளிகள் சிறந்த முறையில் இயங்குவதற்கு வேண்டியசகல உதவிகளையும் அரசாங்கம் செய்யும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

தற்போது பதிவு செய்யப்படாமல் சுமார் 13 ஆயிரத்து ஐநூறு முன்பள்ளிகள் இயங்கிவருகின்றன.

இவற்றை தனியார் நிறுவனங்களும், உள்ளூராட்சி நிறுவனங்களும், அரச சார்பற்ற நிறுவனங்களும் நடத்தி வருகின்றன.

சில முன்பள்ளி பாடசாலைகள், சர்வதேச பாடசாலைகள் என்பவற்றுடனும் இணைக்கப்பட்டுள்ளன.

அவ்வாறு இணைக்கப்பட்ட முன்பள்ளிகள் அந்தப் பாடசாலைகளுக்கு அரசாங்கம் தெரிவித்துள்ள சிபாரிசுகளுக்கமைய செயற்படுவது அவசியமாகும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (செ)

## பரு. பாடசாலைக்கு 30 இலட்சம் செலவில் விஞ்ஞான ஆய்வு கூடம்

(புலோலி)

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப்பாடசாலையில் சுமார் 30 இலட்சம் ரூபா செலவில் புதிய விஞ்ஞான ஆய்வு கூடமொன்று நிர்மாணிக்கப்படவுள்ளது.

இவ் ஆய்வுகூட நிர்மாணத்திற்கான முதற்கட்டவேலைகள் வெகுவிரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதற்கான நடவடிக்கைகளைக் கல்வித்திணைக்களம் மேற்கொண்டுள்ளது.

தற்போது இப் பாடசாலையில் ஆய்வுகூட பற்றாக்குறை நிலவுவதால் மாணவிகள் பலத்த பாதிப்புகள் அடைந்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [உ-52]

## மணிபல்லவத்தில் மஹோற்சவம் 7 ஆம் நாள்



## 'நயினை நாகபூஷணி அம்மன் பாமாலை'

### பேறு தர எழுந்து வாநீ!

ஒருவரையும் பின் செல்லேன் உன்னையன்றி
ஒப்பரிய நாகம்மைத் தாயே! உந்தன்
கருணையுளக் கருத்தன்றிக் கருத்தில் வையேன்
கற்பனவும் காண்பனவும் நீயே! உன்பொற்
திருவுருவில் திளைப்பதுவே தினமும் ஆனேன்
செய்கருமம் உன்னருளால் சிறக்கக் கண்டேன்
பெருவயிரக் கயிலையிலே இருக்குமாப்போல்
பேறுதர நயினையிலே எழுந்து வாநீ!

நயினைச்சோதி

### அமுதெனக் கடைவிழி எறிவாய்

நித்திலம் எறிந்து கடலன்னை நகைத்திடும்
நயினையிலே கவி எழுதிடு காரிகை பயில்வள்
புவி எழில் யாவிலும் உளள் புவனிக்கோர்
அரு மருந்து மயல் கெட வரு தாயே துயரிடர்
அழி முழு மதி ஒளி எனப் பருதியும் நீயே!
அமுதென கடைவிழி எறிவாய்! அன்னாய்
பழுதென அமை அபசுரம் கெட வருவாய்
பதமலர் பணிகுலம் அருள்வாயே சரணே!

பவித்திரன்

### சாம்பவியே அருள் வாய்

பல்லவி
பொங்கும் அலைகடலின் நடுவே
எழில் கோலம் கொண்டவளே நாகபூஷணி அம்மா
(பொங்கும் ...)

அனுபல்லவி
சங்கொலி நிதம் ஒலிக்க
சாம்பவியே வரம் அருள்வாய்
(பொங்கும் ...)

சரணம்
இமைக்கும் பொழுதிலெல்லாம் கண்கள் உனை
இரந்து வரம் கேட்குதம்மா
எமைக் காக்கும் மனம் கொள்ள- உனை
நாடிக் கரங்களும் துதிக்குதம்மா
(பொங்கும் ...)

ஏர். சுதேசிகன் (சுயன்)
கோண்டாவில்
க.கு.அங்.இல- 84

### வாழ்வினிலேவிளக்கேற்று

நயினையிலே உறைகின்ற நாகபூஷணி தாயே
நோயகற்றி வாழ்வுதனை நலம் பெறச் செய்வாய்
தாயிழந்து சேயிழந்து தவிக்கின்ற உள்ளமெலாம்
சீர் பெற்று தினமிங்கு சிறப்படையச் செய்வாய்

அசுரர் குலமழித்து அரசாட்சி புரிகின்ற
வசந்தம் தரும் தாயே; வாழ்விலே விளக்கேற்று
காலம் கனிய வில்லை கவலையது தீரவில்லை
கோலமதை மாற்றி குலமதை நீதேற்று!

கி. அ. தில்லைநாசன்
க.கு.அ.இ-36

### பார்புகழும் நாகதாயே

பாமாலை படித்திடுவோம் நாகதாயே
பக்தியைப் பெருக்கிடுவோம் நாகதாயே
பண்பட்ட தேசம் காண நாகதாயே
பார்புகழும் ஓவியமே நாகதாயே

உள்ளம் பண்படவே தாயே தாயே
உலகில் ஒளி நல்கிடுவாய் தாயே தாயே
உரிமைகள் பெற்றிடவே தாயே தாயே
சட்டங்கள் ஆக்கிடுவாய் தாயே தாயே
சரணம் அம்மா சரணம் அம்மா தாயேதாயே

எஸ்.எஸ். கீர்த்தி

# தரம் 5 புலமைப் பரிசில் பயிற்சி வினாத்தாள்

## வினா இல - 23

### ஆக்கம்: வை. சசிகுமார்

★ **பின்வரும் பாடலை வாசித்து வினாக்களுக்கு விடை தருக.**

"ஆகாயத்தில் மேகம் உண்டு
அழகான காட்சி தரும்
ஆஃா அந்தி வேளையிலே
அற்புத வர்ணங் காட்டிடுமே"

1) அழகான காட்சி தருவது எது?
2) அந்திவேளை என்பது எதனைக் குறிக்கும்?
3) பொருத்தமான ஒத்த கருத்துச் சொல் தருக?
அ] அற்புதம் ஆ] வர்ணம்

★ **பின்வரும் சொற்களுக்குரிய பன்மைச்சொற்களைத் தருக.**

4) பழம — — — — — —
5) நாடு - — — — — —
6) புடைவை — — — — — —

★ **பின்வரும் சொற்களுக்குரிய எதிர் கருத்து சொற்களைத் தருக.**

7) பகை — — — — — —
8) புராதனம் — — — — — —
9) உயர்வு — — — — — —

★ **பின்வரும் சொற்களுக்குரிய ஆங்கிலச் சொற்களைத் தருக.**

10) பன்னிரெண்டு — — — — — —
11) மூக்கு — — — — —
12) ஓடுதல் — — — — — —

★ **பின்வரும் சொற்கள் ஒவ்வொன்றுக்கும் தொடர்பில் சரியாக எழுத்துக் கூட்டப்பட்ட ஆங்கிலச் சொல்லின் கீழ் கோடிடுக.**

13) இன்று [Today Towday Twoday]
14) தேங்காய் [Cocanat oconat. Coconut]
15) வைத்தியசாலை [Hosp tal HosPitel, Hosptal]

★ **பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிலும் உள்ள சொற்களை ஒழுங்கு படுத்தி வாக்கியம் அமைக்க.**

16) அவதியுறுகின்றனர் / வாழும் / அதிகளவான ஆபிரிக்க நாட்டில் / மக்கள் / உணவுத்தட்டுப்பாட்டினால்
17) மாலை மயங்கி / சிலபிராணிகளின் / அதிகரிக்கும் இருள் சூழும் போது / தொழிற்பாடு

★ **பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் சரி எனவும் பிழையாயின் பிழை எனவும் அடையாளமிடுக.**

18) மரக்கறி வகைகளை நறுக்கி நீரில் அமிழ்த்தி அவிப்பதனால் சில போசணைக் கூறுகள் அழிவுறும் [ ]
19) வயல்களிலும் பயிர் நிலங்களிலும் இரவில் இடத்துக்கிடம் தீப் பந்தங்களை ஏற்றி வைப்பதால் பூச்சிப் பீடைகளைக் கட்டுப் படுத்தலாம் [ ]
20) ஒரு நாட்டின் தேசிய ஐக்கியம் சுதந்திரதின விழா மூலம் உறுதிப்படுத்தப் படுகின்றது [ ]
21) ஒளி இல்லாத போது அயலில் உள்ள பொருள்கள் எமக்கு தென்படுவதில்லை [ ]

★ **பின்வரும் வினாக்களுக்குரிய விடையைத் தருக.**

22) பெட்டி ஒன்றின் நிறை 7kg 250g ஆகும். அவ்வாறான 6 பெட்டிகளின் மொத்த நிறையைக் காண்க?
23) கேசவன் ஒரு வியாபாரியிடமிருந்து $1\frac{1}{2}$kg இஞ்சிக் கிழங்கையும், இன்னொரு வியாபாரியிடமிருந்து $3\frac{1}{4}$kg இஞ்சிக் கிழங்கையும், மற்றொரு வியாபாரியிடமிருந்து $1\frac{1}{2}$kg இஞ்சிக் கிழங்கையும் வாங்கினான். இவற்றை ஒவ்வொன்றும் சமநிறையுடைய மூன்று பொதிகளாகக் கட்டினான் எனின் பொதி ஒன்றின் நிறையைக் காண்க?
24) வாணிக்கு ஒரு சட்டை தைப்பதற்கு $\frac{1}{2}$m துணி தேவை ஒரு சட்டை தைப்பதற்கான செலவு ரூபா 25 ஆகவும். 1m துணியின் விலை ரூபா 64 ஆகவும் இருப்பின் வாணிக்கு,
அ) 4 சட்டைகள் தைப்பதற்குத் தேவையான துணியின் அளவைக் காண்க?
ஆ) 4 சட்டைகள் தைப்பதற்குத் தேவையான துணிக்குரிய செலவைக் காண்க?
இ) 4 சட்டைகள் தைத்து முடிக்க ஏற்படும் மொத்தச் செலவைக் காண்க?
25) இன்று திங்கட்கிழமை, நாளை மறுதினம் 27 ஆம் திகதி கடந்த புதன்கிழமை தபீத்தா, தனது பிறந்த நாள் நேற்று என தனது நண்பி அபிராமிக்குக் கூறினார், தபீத்தா பிறந்த திகதியைக் காண்க?
26) ஜெனோசியாவின் வீடு மயூராவின் வீட்டுக்கு கிழக்கே அமைந்துள்ளது பல்லவியின் வீடு ஜெனோசியாவின் வீட்டிற்குத் தென் மேற்குத் திசையில் அமைந்திருப்பதுடன், மயூராவின் வீட்டிற்கு தெற்கே அமைந்துள்ளது ஜெனோசியாவின் வீடு பல்லவியின் வீட்டுக்கு எத்திசையில் அமைந்துள்ளது.
27) ஒட்டுச் சித்திரத்தினை உருவாக்குவதற்குத் தேவையான பொருட்கள் மூன்றினைக் குறிப்பிடுக?
28) கோலங்களை அச்சிடுவதற்கு நீர் வகுப்பறையில் பயன்படுத்திய பொருள்கள் மூன்றினைக் குறிப்பிடுக?
29) வகுப்பறையில் தையல் தொழிற்பாட்டிற்கு நீர் பயன்படுத்திய பொருள்கள் மூன்று தருக?
30) ஜெபான் கண்ணாடிக் குவளையில் சிறிதளவு பனிக்கட்டித் துண்டுகளை இட்டு குவளையினை நன்கு மூடிவிட்டு சிறிது நேரத்தின் பின்னர் குவளையின் வெளிப்பக்கத்தில் நீர்த்துளிகள் படிந்திருப்பதை அவதானித்தான். இச்செயற்பாட்டின் மூலம் அவன் பெறும் முடிவு என்ன?

★ **அடுத்துவரும் எண்களைக் குறிப்பிடுக.**

31) 62, 54, 46, — — — —
32) 465, 475, 490, — — — — —

## புலமைப் பரிசில் பரீட்சை வினா இல- 22

### அதி கூடிய புள்ளிகளைப் பெற்றவர்களின் பெயர் விபரம்

01) ச. மேனன், யாழ். புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்
02) சி. கெங்காதரன், சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலை
03) கு. ஜனனி, அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயம்
04) ச. யசிந்தன், மானிப்பாய் சோதி வேம்படி வித்தியாசாலை
05) க. கஜந்தன், மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை
06) சி. துவாரகன், முகமாலைறோ. க. த. க. பாடசாலை
07) அ. நிருபன், துன்னாலை மெ மி. த. க. பாடசாலை
08) சு. துவாரகன், யாழ் இந்து ஆரம்பப்பாடசாலை
09) இ. ஸ்ரீராம், சரசாலை ஸ்ரீ கணேச வித்தியாலயம்
10) கு. சிந்துஜா, வல்வை மகளிர் மகாவித்தியாலயம்
11) த. ஏகவரதன், யாழ் இந்துஆரம்பப்பாடசாலை
12. சி. தர்சிகா, வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி
13) ச. கணேஸ்பரன், கோப்பாய் நாவலர் வித்தியாலயம்

(நாளை தொடரும்)

33) நான்கு ஆண்டுகளுக்கு ஒருதடவை ஒலிம்பிக்விழா நடைபெற்றுவருகின்றது. 1996 ஆம் ஆண்டு 26 ஆவது ஒலிம்பிக் விழா நடைபெற்றது 30 ஆவது ஒலிம்பிக் விழா எந்த ஆண்டில் நடைபெறும்?

★ **அருணிடம் 48 மாபிள்கள் உள்ளன. யூலியனிடம் அருணிடம உள்ள மாபிள்களின் 1/3 பங்கு மாபிள்கள் உள்ளன. றெக்சனிடம் உள்ள மாபிள்களின் எண்ணிக்கையின 4 மடங்கிலும் 2 கூடுதலாக உள்ளது.**

34) குறைந்த எண்ணிக்கையான மாபிள்களை வைத்திருப்பவர் யார்?
35) மூவரிடமும் உள்ள மாபிள்களின் மொத்த எண்ணிக்கை யாது?

★ **பின்வரும் வினாக்களின் ஆரம்பத்தில் கூறப்படும் வாக்கியத்தை நன்கு விபரிக்கின்ற விடையைத் தெரிவு செய்க.**

36) அகிம்சன் தனக்கு எதிரான எவ்விதக் குற்றச் சாட்டுக்களையும் பயமின்றித் தெளிவான தீர்வுகாண முற்படுபவன் ஆவான்.
அ] அகிம்சன் தன்னம்பிக்கையுடையவன்
ஆ] அகிம்சன் தன் போக்கில் நடப்பவன்
இ] அகிம்சன் ஒரு பொலிஸ்காரன்
37) யூலி ஜெனோசியாவிலும் பார்க்க வேறுபட்டவள். அவள் கதைப்பதில் திறமையுடையவளாக காணப்படுவாள். அவள் அடிக்கடி சண்டை சச்சரவுகளில் ஈடுபடுபவள். தனது கவனக்குறைவினால் பென்சில்களையும் நூல்களையும் தொலைத்து விடுவாள். மற்றவர்களுடைய பொருள்களைப் பற்றி அக்கறையும் செலுத்த மாட்டாள்.
அ) யூலி அதிகமாகக் கோபப்படுவாள்
ஆ) யூலி ஒரு சோம்பேறி
இ) யூலி குறும்புத் தனமும், கவனக்குறைவும், தன்னலமும் உடையவள்
38) நந்தகுமார் அடிக்கடி தலையிடி வருவதாகக் கூறுவான். கண்களைக் கசக்கிக் கொண்டிருப்பான். கரும் பலகையை மிகவும் சங்கடப்பட்டுப் பார்ப்பான். வாசிக்கும் போது சில எழுத்துக்களை வேறு எழுத்தாக மாற்றி வாசிப்பது வழக்கம். சில வேளைகளில் இவரின் கண்களிலிருந்து கண்ணீரைக் காணமுடியும்.
அ) நந்தகுமார் தந்திரமிக்கவன்
ஆ) நந்தகுமார் சிறந்த விளையாட்டு வீரன்
இ) நந்தகுமார் பார்வைக் குறைபாடுடையவன்
39) பின்வரும் பந்தியில் காணப்படும் எழுத்துப் பிழைகளைத் திருத்தி எழுதுக?
'பன்பட்ட மனிதர்கள் மனித மணங்களைப் புன்படுத்த மாட்டார்கள். மற்றவர்களது மகிள்ச்சியை மனதார விரும்புவார்கள். இல்லாமை இல்லாத நிலை வேண்டி களலாத மனிதர்களையும் நளளாக வாளவைப்பார்கள். அன்போடு அற நெறியிலே அனைவரையும் வாழ வைப்பார்கள்.
40) கிரிக்கெட் வீரர் ஒருவர் அடித்த பந்து மைதான எல்லைக் கோட்டைத் தரைகட்டிக் கடந்து சென்றால் கிடைக்கும் ஓட்ட எண்ணிக்கையை ஆங்கிலத்தில் எழுதுக?

**குறிப்பு:-**
விடைகள் வேறுதாளில் எழுதி அனுப்பவும். இதற்கான விடைகளை 02-07-2001 இற்கு முன் எமக்குக் கிடைக்கத்தக்கதாக அனுப்பி வைக்கவும்.

### கல்விப் பகுதி
### வினா இல- 23

"வலம்புரி"
இல: 15, வெள்ளாந்தெரு.
யாழ்ப்பாணம்.

மாணவர் முழுப்பெயர்: ....................
சொந்த முகவரி: ....................
கற்கும் பாடசாலை: ....................
மாணவர் கையொப்பம்: ....................

இப்படிவத்தை வெட்டி உங்கள் விடைத்தாளுடன் தவறாது இணைத்து அனுப்பிவைக்கவும்.

## புலமைப் பரிசில் பரீட்சை வினா இல-22 விடைகள்

1) ச
2) தி
3) அ
4) கவலை
5) வியர்வை
6) வறுமை
7) வீரம்
8) சனக்கூட்டம்
9) கடல்
10) 96 மீற்றர்
11) 22 நிமிடம்
12) நடுவே உள்ளவர்
13) சோபிகா
14) 4 L
15) உறைக்கும்
16) பிராணி
17) பிழை
18) பிழை
19) சரி
20) பிழை
21) 7
22) 5
23) 6
24) 14
25) 150
26) 40
27) 60
28) 80
29) 360
30) சிங்கராஜவனம்
31) மன்னார்
32) கொழும்பு
33) ரூபவாஹினி
34) இலங்கைபோக்குவரத்து சபை
35) 22
36) 44 செ. மீ
37) 220 நிமி (3.40)
38) 187 ரூபா
39) 55 மீற்றர்
40) 66 லீற்றர்

## இன்று ரதோற்சவம்

(யாழ்ப்பாணம்)
சுன்னாகம் கந்தரோடை வற்றாக்கைப்பதி அருள்மிகு விசாலாட்சி சமேத விஸ்வநாதசுவாமி ஆலய இரதோற்சவம் இன்றும் தீர்த்தோற்சவம் நாளை வியாழக் கிழமையும் நடைபெறவுள்ளன.
(செ)

## காரைநகருக்கு மின்சாரம்

(யாழ்ப்பாணம்)
காரைநகர் பகுதிக்கு மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது.
காரைநகர் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஊர்காவற்றுறைப் பிரதேசசபைத் தலைவரும் யாழ் மாவட்ட பிரதி அமைப்பாளருமான என். மதனராஜாவுடன் நடத்திய சந்திப்பை அடுத்து இதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.
இதற்கான நிதியினை வடக்கு புனர்வாழ்வு புனரமைப்பு நிதியிலிருந்து ரூபா 25 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் இவற்றில் ஊர்காவற்றுறைக்கு 10 இலட்சம் ரூபாவும் வேலணை, எழுவைதீவு, அனலைதீவு என்பவற்றுக்கு தலா 5 இலட்சம் ரூபா வீதம் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.
(உ-5)

## தருப்புமுகாம் விஜயம்

(யாழ்ப்பாணம்)
யாழ்: மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அதிகாரி என். ஜீவேஸ்வரா இன்று காங்கேசன் துறை கைதிகள் தடுப்பு முகாமிற்குச் செல்லவுள்ளார். இவர் கைதிகளின் உறவினர்களினால் வழங்கப்படும் உணவு மற்றும் கடிதங்கள் என்பவற்றினை எடுத்துச் சென்று கைதிகளிடம் கையளிப்பார்.
மேலும் கைதிகளால், உறவினர்களுக்கு வழங்கப்படும் கடிதங்களை அவர்களின் உறவினர்களிடம் ஒப்படைப்பார்.
(உ-10)

## இன்று ஒரு தகவல்

# மாரடைப்பு மரணங்கள்

நேற்றுவரையும் நன்றாகப் பேசிக்கொண்டிருந்தவர்கள் இன்றைக்கு திடீரென்று காணாமல்போய் விடுகிறார்கள் சார்! என்னவென்று விசாரித்தால் அவர் மாரடைப்பிலே போய்விட்டார் என்கிறார்கள். மாரடைப்பு நோயினால் ஏற்படுகிற மரணம் இப்பொழுது அதிகமாகிக் கொண்டிருக்கிறதென்பதை டாக்டர்களே ஒத்துக் கொள்கிறார்கள். இதற்கு என்ன காரணம் என்று நினைக்கிறீர்கள். இரத்தத்தில் கொழுப்பு அதிகமாகச் சேர்கிறது. புகைபிடிக்கிறது. நுரையீரல் பாதிக்கப்படுகிறது. இவையெல்லாம்தான். கட்டுப்படுத்தாத நீரிழிவுநோய் உடல் எடை அதிகரிக்கிறது, சிறுநீரகக் கோளாறு; உயர் இரத்த அழுத்தம் இவையெல்லாம் முக்கியமான காரணங்கள்.

இரத்தத்தில் அதிகமாகக் கொழுப்பு சேர்ந்தால் இருதய நாளத்தில் அடைப்பு ஏற்படுகிறது. அதனால் மாரடைப்பு வருகிறது. இது இப்படியே போய்க்கொண்டிருந்தால் இந்த நூற்றாண்டுக்கடைசியில் இருக்கிற சனங்களில் பாதிக்குப் பாதிப்பேர் இருதய நோயினால் பாதிக்கப்படுகிற அபாயம் இருக்கிறதென்று சொல்லி நிபுணர்கள் எல்லாம் பயமுறுத்துகிறார்கள். 'சரி அவர்கள் சொல்லுகிறதோடு இருக்கக்கூடாதா? அதை நீ வேறு சொல்லி ஏன் பயமுறுத்துகிறீர்களா? எல்லாம் ஒரு எச்சரிக்கைதான் சார்! வேறேன்ன? அதெல்லாம் இருக்கட்டும். இருதய நோய் வராமலிருக்க வேண்டுமென்றால் நாம் எப்படி நடந்து கொள்ளவேண்டும்' அதைப்பற்றி நிபுணர்கள் என்ன சொல்கிறார்கள். அதைத் தெரிந்துகொள்ளலாம்.

முதலில் ஆகாரத்தில் கட்டுப்பாடு. கொழுப்பு அதிகமாக இருக்கிற ஆகாரம் எதுவாக இருந்தாலும் அதை விட்டு விடவேண்டும். மது, புகை இரண்டும் வேண்டாம். உப்புக்குறைக்கவேண்டும். பழம், காய்கறி நல்லது. முடிந்த அளவுக்குச் சமைக்காமல் பச்சையாகவே சாப்பிடலாம். திராட்சை, அப்பிள் இவையெல்லாம் மிகவும் நல்லவை சூரியகாந்தி எண்ணெய் உபயோகப்படுத்தலாம்.

கொலஸ்ட்ராலைக் குறைப்பதற்கு பூண்டு மிகவும் உதவுகிறது. கோபம்-பயம், ஏமாற்றம் இது மாதிரியான மன உணர்வுகள் ஏற்படுத்துகிற சங்கடம் இருக்கிறதல்லவா? அவைகூட இரத்தத்திலுள்ள கொழுப்பையும், கொலஸ்ட்ரால் அளவையும் உடனடியாக அதிகப்படுத்துகிறதாம்; முன்னெச்சரிக்கையாக எல்லாரும் உடற்பயிற்சி செய்வது நல்லது நடக்கிறது; நடந்துகொண்டே ஓடுகிறது; கயிறுதாண்டுவது, நீந்துவது, சைக்கிள் விடுவது, குதிரைச்சவாரி இவற்றில் எது உங்களால் முடியுமோ அதைமட்டும் செய்யுங்கள்; போதும்;

முடியாததைச் செய்வதற்கு முயற்சிசெய்ய வேண்டாம். 50 வயதிற்குமேலே கயிறு தாண்டுகிறேன் என்று சொல்லிக்கொண்டு கால்தடுக்கி குப்புற விழுந்துவிட்டு அப்புறம் என்னைத் திட்டாதீர்கள்! அல்லது குதிரைச்சவாரி செய்யச்சொல்கிறேன் என்பதற்காகக் குதிரையைத் தேடிக்கொண்டு அலையாதீர்கள்; நடந்தாலே போதும். அது ஒரு நல்லபயிற்சி.

நுட்பமான வேலைகளை உட்கார்ந்து செய்யக்கூடியவர்கள் இருக்கிறார்கள், அவர்களுக்கெல்லாம் உடற்பயிற்சிதேவை. லண்டனில் ஜே. என். மாரிஸ் என்றஒரு டாக்டர் ஒரு கணக்கு எடுத்துப் பார்த்துவிட்டு தபால் பிரிக்கிறவர்களைவிட தபால் கொடுக்கிறவர்களுக்கு மாரடைப்பு (ஹாட்அற்றாக்) குறைவாக இருக்கிறதென்று சொல்கிறார். அதனால் யாராவது அலைகிறதுபோல அல்லது நடக்கிறது போல் உள்ளவேலையில் இருந்தால் அலுத்துக்கொள்ள வேண்டாம் உற்சாகமாக இருங்கள்.

கொலஸ்ட்ராலைக் கட்டுப்படுத்த மூலிகை வைத்தியம் சில வழிகள்சொல்கிறது. அறுகம்புல் அரைப்பிடி. 10 மிளகு இவை இரண்டையும் சேர்த்து அரைக்கவேண்டும். தண்ணீர் கலந்து தினம் காலையில் குடித்து வரலாம்.

முள்ளங்கி, வாழைத்தண்டு அவியல் செய்து வாரத்திற்கு இரண்டு நாள் இரண்டு கப் அளவுக்குச் சாப்பிடலாம். முருங்கை இலைச்சாறு அல்லது பூண்டு சேர்ந்த மிளகு ரசம் வாரத்துக்கு மூன்று நாள் சாப்பிடலாம். வெந்தயம் கொஞ்சம், சீரகம் கொஞ்சம், மஞ்சள் பொடி இரண்டு சிட்டிகை. துளசி இலைச்சாறு ஒரு கரண்டி இவற்றைக் கலந்து தினம் ஒரு வேளை சாப்பிடலாம். பார்லி, கொள்ளு. புதினா இவற்றில் ஏதாவதொன்றை சூப் தயார் செய்து உப்பு இல்லாமல் ஒரு குவளை சாப்பிடலாம்.

இஞ்சிச்சாறு, மிளகு, எலுமிச்சம் பழச்சாறு, தேன் இவற்றைக் கலந்து காலையில் வெறும் வயிற்றில் சாப்பிடலாம். இப்படி நிறைய வைத்தியம் இருக்கிறது. உடம்பு, மனது இரண்டையும்நன்றாக வைத்துக் கொண்டோமென்றால், எந்த வியாதியும்கிட்ட நெருங்காது; அதிர்ச்சியான விஷயங்களுக்கும் மனதில் இடம் கொடுக்கக்கூடாது.

ஒருவர் வீட்டில்எப்போதும் கொழும்பு, எண்ணெய் இல்லாமல் ஆகாரமே கிடையாது அந்த அம்மாவுக்கு எண்ணெய் தாராளமாக ஊற்றாமல் சமைக்கவே வராது; வீட்டுக்காரருக்கு ஹார்ட் அட்டாக் வந்து விட்டது. ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுவிட்டார். டாக்டர் வைத்தியம் செய்தார். இரண்டுநாள் கழித்து டாக்டர் அவரிடம் சார்! இப்போதுதான் நீங்கள் ஆபத்தான கட்டத்தைத் தாண்டியிருக்கிறீர்கள் என்றார். அதற்கு அந்த நோயாளி ''இரண்டு நாட்களுக்கு முன்னாலேயே தாண்டிவிட்டேன் என்றார். எப்படி என்று கேட்டார் டாக்டர் அதுதான் வீட்டை விட்டு வெளியே வந்ததைச் சொன்னேன்'' என்றார்.

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# நாய்களுக்கான தடுப்பு ஊசி தட்டுப்பாடு

(மந்திகை)

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் நாய்களை நஞ்சூட்டி அழிக்கும் மருந்து மற்றும் நாய்களுக்கான தடுப்பூசி, குழந்தைகள் பிறந்தவுடன் கொடுக்கப்படும் போலியோ என்பனவற்றுக்கு தட்டுப்பாடு நிலவுவதாக தெரிவிக்கப்படுகிறது;

இதனால் அண்மைக்காலமாக பிடிக்கப்படும் நாய்கள் முறையற்ற வகையில் கொல்லப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது; [உ-23]

# பாடசாலை மாணவர்கள் ஊடாக

# மது ஒழிப்பு தொடர்பான விழிப்பு

## சமூக மட்டத்தில் ஏற்படுத்த வேண்டும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் அதிகரித்த மதுபான உற்பத்தியானது மக்கள் மத்தியில் பெரும் பாதிப்புக்களை ஏற்படுத்தி வருகின்றது.

இதனைத் தடுக்கும் வகையில் பாடசாலை மாணவர்கள் ஊடாக மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.

சட்ட விரோத மதுபான உற்பத்தி, விற்பனைக்கு எதிராக யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் தலைவர் எஸ் கஜேந்திரன் தலைமையில் பல்கலைக்கழக வரலாற்றுத்துறை மண்டபத்தில் நேற்று முன் தினம் பி.ப 3.00 மணிக்கு நடை பெற்ற உயர் மட்டக் குழுக்கூட்டத்தில் யா/போதனா வைத்தியசாலையின் சமுதாய மருத்துவத்துறை நிபுணர் டாக்டர் செ.சு நச்சினார்க்கினியர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்;

மதுபான உற்பத்தியானது மக்கள் மத்தியில் பெரும் பாதிப்புக்களினை ஏற்படுத்தி வருகின்றன.

இதனைத் தடுக்கும் வகையில் மாணவர் சமுதாயத்தை ஈடுபடுத்தவேண்டும்.

அத்துடன், அரச அதிபரின் உதவியுடன் பிரதேச செயலர்கள் ஊடாக கிராம மட்டத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்த விழிப்புக் குழுக்களை அமைக்கவேண்டும் எனத் தெரிவித்தார்.

அங்கு யாழ். மாவட்ட மதுவரித் திணைக்கள உதவி ஆணையாளர் சி. சிவானந்தன் உரையாற்றுகையில்,

மதுபானக்கடைகளை பாடசாலைகள், பொது ஸ்தலங்களில் இருந்து 100 மீற்றர் அப்பால் அமைக்க வேண்டும்.

மதுபான விற்பனை நிலையங்களுக்கு பிரதேச சபைகள், மாநகர சபைகளினால் வழங்கப்படும் அனுமதிப் பத்திரங்களை மட்டுப்படுத்த வேண்டும் எனத் தெரிவித்ததுடன்,

யாழ். மாவட்டத்தில் சிறிய கடைகள் முதல் பெரிய வியாபார நிலையங்கள் வரை கசிப்பு உற்பத்திக்கு உதவும் ''ஈஸ்ட்'' அதிகமாக விற்பனை செய்வதாகவும், இதனைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

மேற்படி கூட்டத்தில் யாழ் மாவட்ட மதுவரித் திணைக்கள உத்தியோகத்தர் எஸ். சோதிநாதன், யாழ். பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பாலச்சந்திரன், யாழ். மாவட்ட சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் செல்வி சாந்தா அபிமன்னசிங்கம் மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்;

(உ-6)

## மணவாளக் கோலம்

(புலோலி)

பருத்தித்துறை தம்பசிட்டி அருள்மிகு ஸ்ரீமஹாமாரி அம்பாள் (பண்டாரிஅம்மன்) ஆலய மணவாளக் கோலத் திருவிழாவும் சங்காபிஷேகமும் எதிர்வரும் வெள்ளிக் கிழமை நடைபெறுமென ஆலய பிரதம குரு ஸ்ரீலஸ்ரீ. சி. சபாரத்தின தேசிகர் தெரிவித்துள்ளார்,

(செ-52)

## 20 இலட்சம் ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பிரதேச செயலர் பிரிவில் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்வதற்காக இவ் வாண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்ட நிதியிலிருந்து 20 இலட்சம் ரூபாவினை யாழ். தேர்தல் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத் தலைவரும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா ஒதுக்கீடு செய்துள்ளார்;

ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதியின் மூலம் சனசமூக நிலையங்கள், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள், முன்பள்ளி, மற்றும் பாடசாலைகள் ஆகிய புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளதாகவும்,

இவ் வேலைத் திட்டங்கள் யாவற்றினதும் செயற்பாட்டு முகவர்களாக யாழ்ப்பாணப் பிரதேச செயலகம் செயற்படும் எனவும் ஈ.பி.டி.பியின் யாழ். அமைப்பாளரும், யாழ். மாநகர சபை உறுப்பினருமான ரீ. றீகன் தெரிவித்துள்ளார்,

(உ)

## குடிசன மதிப்பீட்டில்

# தலைவர் பிரபாகரனும் இணைக்கப்படுவார்

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வே. பிரபாகரனும், இயக்க உறுப்பினர்களும் குடிசன மதிப்பீட்டில் சேர்க்கப்படுவர் என குடிசன மதிப்பீட்டுத் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் ஏ. ஜி டபிள்யு நாணயக்காரா தெரிவித்துள்ளார்.

வடக்குப் பகுதியில் குடிசன மதிப்பீடு மேற்கொள்ள யு. என். எச். சி. ஆர். அமைப்பினூடாக விடுதலைப் புலிகள் இயக்கத்தின் ஒத்துழைப்பை நாடியுள்ளதாகவும்.

வன்னி போன்ற இராணுவக்கட்டுப்பாடற்றபகுதிகளில் குடிசன மதிப்பீடு உரிய திகதியில் ஆரம்பிக்கப்படாமல் தாமதம் ஆகலாம் எனவும்,

தலைவர் பிரபாகரனும் புலி உறுப்பினர்களும் கூட இந்த நாட்டின் பிரஜைகளே எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (உ)

# தென்மராட்சி கல்வி வலய பாடசாலைகளுக்கு 2 மில்லியன் ஒதுக்கீடு

(மந்திகை)

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் உடனடித் தேவைக்காக 2மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்வதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உறுதியளித்துள்ளார்.

பளைப் பிரதேச இடம் பெயர்ந்தோர் நலன் புரிச் சங்கத்தின் பிரதிநிதிகள் நேற்று முன்தினம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை சந்தித்து மாணவர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக அவரின்கவனத்திற்கு கொண்டு வந்ததை அடுத்து இவ் உறுதி மொழி வழங்கப்பட்டுள்ளது.

பாடசாலைக்கான தற்காலிக கொட்டகை அமைப்பதற்கு ஒரு மில்லியன் ரூபாவும் பாடசாலைக்கான தளபாடங்கள் கொள்வனவு செய்ய 1 மில்லியன் ரூபாவும் ஒதுக்குவதாக உறுதியளித்திருந்தனர்.

இச்சந்திப்பில் தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் வ. சொல்வராசாவும்கலந்து கொண்டார். (உ-23)

## மின்சாரம் தாக்கியதால்

# மின்சாரசபை ஊழியரின் வலதுகால் முறிந்தது

[யாழ்ப்பாணம்]

தொழிலின் நிமித்தம் மின் கம்பத்தில் ஏறிய மின்சார சபை ஊழியர் மின்சாரம் தாக்கியதால்நிலத்தில்வீழ்ந்து வலதுகால் முறிவடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுக்காலை துன்னாலைப் பகுதியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் அல்வாயைச் சேர்ந்த சுப்பிரமணியம் முருகேஸ்வரன் [வயது 48] என்பவரே கால்முறிந்தவராவார்; [உ-10]

## மனமுடைந்த பெண்

# மருத்துவபீட மாணவனை கத்தியால் குத்தினாள்

(கொழும்பு)

ஜயவர்த்தனபுர பல்கலைக்கழக மருத்துவபீடத்தில் கல்வி கற்கும் மாணவர் ஒருவரைக் கத்தியால் குத்திக் காயப்படுத்திய பின் தானும் நஞ்சருந்தித் தற்கொலை செய்ய முயன்ற இளம் பெண்ணின் முயற்சி முறியடிக்கப்பட்டுள்ளது;

கடந்த ஐந்து வருடங்களாக மேற்படி பெண்ணைக் காதலித்து விட்டு சில மாதங்களுக்கு முன் வேறோர் யுவதியைத் திருமணம் செய்து கொண்டதாலேயே ஆத்திரமுற்ற நிலையில் இச் சம்பவம் இடம் பெற்றதாகத் தெரிய வந்துள்ளது.

(உ)

# பாக். ஆயுதப் போட்டியில் இறங்காது ஜனாதிபதி முஷாரப் தெரிவிப்பு

(இஸ்லாமபாத்)
பாகிஸ்தான் பிற நாடுகளுடன் ஆயுதப் போட்டியில இறங்கமாட்டாது என்று ஜனாதிபதி ஜெனரல் முஷாரப் தெரிவித்துள்ளார்

செய்தியாளர் மத்தியில் முஷாரப் பேசுகையில்; பேரழிவை ஏற்படுத்தக்கூடிய எந்த ஆயுதப் பாவனையிலும் பாகிஸ்தான் ஈடுபட மாட்டாதென்றும் சீரழிந்திருக்கும் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதே தனது முக்கிய கடனாகுமென்றும் தெரிவித்துள்ளார்.

அடுத்தமாதம் இந்தியப் பிரதமருடன் பேச்சு வார்த்தை நடத்தும் பொழுதும் பிராந்திய ஒற்றுமை மற்றும் பொருளாதாரவளர்ச்சி பற்றியுமே முக்கிய பேச்சுகள் இடம் பெறுமென்று தெரிவித்துள்ளார். (து)

# வியக்க வைக்கும் விந்தை நிகழ்வுகள்

★ **கழுதைக்கு கிடைத்த கௌரவம்**

இங்கே அரிய சாதனைகளைப் புரிந்து கொண்டிருக்கும் ஆட்களுக்குக் கூட உரிய கௌரவம் கிடைப்பதில்லை. ஆனால் அவுஸ்திரேலிய அரசு ஒரு கழுதைக்கு விருது வழங்கி கௌரவித்துள்ளதென்றால் பாருங்களேன்...

இக் கழுதை அவுஸ்திரேலிய இராணுவத்தில் பணியாற்றியதாம்.

உலகப் போர் நடை பெற்ற காலத்தில் காயமடைந்த வீரர்களைப் பாதுகாப்பான இடத்திற்கு இப் பயிற்சி பெற்ற கழுதை தானே தூக்கிச் சென்று காப்பாற்றியுள்ளது. மனிதராக இல்லாவிட்டாலும் இதன் மனிதாபிமான செயலுக்கு அவுஸ்திரேலிய அரசு கௌரவம் வழங்கியுள்ளது. நிச்சயம் கொடுக்கப்பட வேண்டிய கௌரவம் தான்!

★ **மிருகங்கள் மீட்டிய இன்னிசை**

'ஜங்கிள பெல்ஸ்' என்ற இசைத்தட்டு தற்போது அமெரிக்காவில் சக்கை போடு போடுகிறது. அரிய பல இசைத் தொகுப்புக்கள் அடங்கிய இவ் இசைத் தட்டிற்கு அப்படி யார் தான் குரல் கொடுத்துள்ளார்கள் என்று எண்ணுகிறீர்களா?

இவ் இசைத்தட்டில் மனிதர்களின் குரலே இல்லை என்பது தான்விடயம். ஆம் ஐந்துநாய்களும், ஒருபூனையும் இரண்டு ஆடுகளும் சேர்ந்து தான் இவ் இசைத் தட்டிற்கு குரல் கொடுத்துள்ளனவென்றால் ஆச்சரியமாக இல்லையா?

அவதானி

# விடுதலைச் சிறுத்தைகள் அணித்தலைவர் விடுதலை

(சென்னை)
தமிழ்நாட்டு விடுதலைச் சிறுத்தைகள் அணியின் தலைவர் திருமாவளவன் உட்பட இருநூற்றி நாற்பது பேர் விடுவிக்கப்பட்டனர்.

சென்னையில் நேற்று முன் தினம் மதியம் இவர்கள் காவல்துறையினரால் விடுதலை செய்யப்பட்டனர்.

விடுதலைச் சிறுத்தைகளின் முக்கிய தலைவர் ஒருவர் அண்மையில் கொலை செய்யப்பட்டதை அடுத்து நாடு தழுவிய ஆர்ப்பாட்டங்களுக்கு விடுதலைச் சிறுத்தைகள் அணி முயற்சி செய்கிறது என்ற சந்தேகத்தின் பேரிலேயே தலைவர் திருமாவளவன் உட்பட பல நூற்றுக்கணக்கானோர் கைது செய்யப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (து)

## செய்திப்பரல்

★ பிலிப்பைன்ஸில் மாயோன் எரிமலை தீயைக்கக்க ஆரம்பித்ததைத்தொடர்ந்து அப்பகுதியிலிருந்து கிராமவாசிகள் இடம் பெயர ஆரம்பித்துள்ளனர்.

★ ஜப்பான் தலைநகர் ரோக்கியோவில் மாநகர சபைத் தேர்தல் ஆரம்பமாகியுள்ளது

★ 26 வருடங்களின் பின்னர் இந்தோனேஷிய ஜனாதிபதி அவுஸ்திரேலியாவிற்கு விஜயம் செய்துள்ளார்.

★ சீனாவில் 1-8 தொன் அபினும் 5.3 தொன் ஹெரோயினும் கடந்த 5 மாதங்களுக்குள் கைப்பற்றப்பட்டுள்ளது.

(உ-9)

மொஸிடோனிய அதிபரை

# பதவி விலகக் கோரி மக்கள் ஆர்ப்பாட்டம்

(லண்டன்)
மெஸிடோனிய ஜனாதிபதி வோறிஸ் திறாஜ் ஹாஸ்கி பதவி விலக வேண்டுமென அந் நாட்டின் தலைநகரில் 5 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் ஆர்ப்பாட்டம் செய்துள்ளனர்.

கடந்த மாதம் ஸ்தம்பிதம் அடைந்த அரசியல் சீர் திருத்தப் பேச்சு வார்த்தைகளை மீண்டும் ஆரம்பிப்பது பற்றி மெஸிடோனிய ஜனாதிபதி கலந்துரையாடல் ஒன்றை நடாத்திக் கொண்டிருந்த சமயம் ஆர்ப்பாட்டக் காரர்கள் பொலிஸாரின் கடும் எதிர்ப்பையும் மீறி மெஸிடோனியா பாராளுமன்றத்துள் நுழைந்து ஆர்ப்பாட்டம் செய்துள்ளனர்.

படைகளுக்கும் அல்பேனிய கிளர்ச்சியாளர்களுக்கும் இடையில் மேற்கொள்ளப்பட்டு வரும் யுத்த நிறுத்தத்தை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்த மக்கள், மெஸிடோனிய ஜனாதிபதியை தேசத்துரோகி என்று வர்ணித்துள்ளார்கள். (உ-9)

ராஜ்குமார் விடுதலைக்கு உதவிய

# களத்தூர் மணி கைது செய்யப்பட்டார்

களத்தூர் மணி நேற்று திடீரெனக் காவல் துறையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தனக் கடத்தல் வீரப்பனின் பிடியிலிருந்து கன்னட நடிகர் ராஜ்குமாரை விடுவிப்பதற்கு அரசின் தூதுவராக இவர் தொழிற்பட்டிருந்தார்.

களத்தூர் மணியின் கைதால் சந்தனக் கடத்தல் வீரப்பனின் நடமாட்டத்தை அறிய முடியுமென்றும் வீரப்பனைப் பிடிப்பதற்குரிய தடயங்கள்கிடைக்கலாமென்று காவல்துறையினர் தெரிவித்தனர். (து)

# சாத்வீக வழியில் விடுதலையடைந்த உக்ரைனுக்கு பாப்பரசர் பாராட்டு

## சுதந்திர தினத்தையொட்டி

(ஜீவ்)
சோவியத் ரஷ்யாவின் சர்வாதிகார ஆட்சியில் இருந்து கத்தி இன்றி இரத்தமின்றி அமைதியாக விடுதலை அடைந்த உக்ரைன் மக்களை பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் பாராட்டியுள்ளார்.

முதற் தடவையாக ஐந்து நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு உக்ரைன் போய்ச் சேர்ந்த பாப்பரசர் அந்நாட்டு மக்களுக்கு விடுத்த செய்தியிலேயே இதனைத் தெரிவித்தார்.

1991 ஆம் ஆண்டு உக்ரைன், சோவியத் ரஷ்யாவில்இருந்து சுதந்திரம் பெற்றுக் கொண்டது. இச் சுதந்திரத்தை நினைவு கூர்ந்த போதே பாப்பரசர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அத்துடன் அண்மையில் செர்னோபில் அணுக்கசிவு விபத்தில் கொல்லப்பட்டோருக்கும் பாப்பரசர் ஆழ்ந்த அனுதாபம் தெரிவித்துள்ளார். (உ-9)

# கியூபா ஜனாதிபதி மேடையில் மயக்கமுற்றார்

(ஹவானா)
கியூபா ஜனாதிபதி பொதுக் கூட்டம் ஒன்றில் உரையாற்றிக் கொண்டிருந்த சமயம் மயக்க நிலை அடைந்தார் எனத்தெரிய வருகிறது.

இரண்டு மணித்தியாலமாக தொடர்ந்து உரையாற்றிய கியூபா அதிபர் பிடல் கஸ்ட்ரோ மயக்கமடைந்து சில நிமிடங்களின் பின்னர் மீண்டும் மேடையில் ஏறி உரையாற்றியுள்ளார்

74 வயதான பிடல் கஸ்ட்ரோ தனக்கேற்பட்ட இத் திடீர் மயக்கம் பற்றி கருத்து தெரிவிக்கையில் இது தனது மரணத்திற்கான ஒத்திகையோ? என்று தமாசாகக் கூறியதாகவும் கியூபா செய்தித்தாள்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (உ-9)

## உலக தரிசனம்

# பணியாளர்களைப் பணயம் வைத்த சிறைக் கைதிகள்

(சாவோபவுலோ)
பிறேசில் சிறைச்சாலையில் வசதிகளை கூட்டும்படி உண்ணாவிரதம் மற்றும் ஆர்ப்பாட்டப் போராட்டங்களில் ஈடுபட்டு வரும் கைதிகள் சிறைச்சாலையில பணி புரியும் 9 பேரை பணயக் கைதிகளாகப் பிடித்து வைத்துள்ளதாக தெரியவருகிறது.

7 சிறைக் காவலர்களையும் 2 ஊழியர்களையும் சிறைக் கைதிகள்பணயக் கைதிகளாக பிடித்து வைத்துள்ளனர்.

இதேவேளை, சிறைச்சாலை உத்தியோகத்தர்களும், பொலிஸாரும் பணயக் கைதிகளின் விவகாரம் குறித்து சிறைக்கைதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றனர்.

அத்துடன், அங்கு உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் சிறைக்கைதிகளில் ஒருவர் அண்மையில் பலியசகியமை தெரிந்ததே. (உ-9)

எயிட்ஸ் நோயினால்

# உலகுமுழுவதிலும் 2 கோடி 20 லட்சம் பேர் பலி

(நியூயோக்)
எயிட்ஸ் நோயினால் இதுவரை 2 கோடியே20இலட்சம் மக்கள் இறந்ததற்காக ஐ.நா பொதுச்சபையில் மௌன அஞ்சலி செலுத்தப் பட்டது.

ஐ.நா. கூட்டியுள்ள எயிட்ஸ் சம்பந்தமான மூன்று நாள் கூட்டத்தொடரில் பல அமைப்புக்களைச் சேர்ந்த 3 ஆயிரத்துக்கும் அதிகமானோர் கலந்து கொண்டனர்.

நியூயோர்க்கில் நடைபெறும் இக்கூட்டத்தில் எயிட்ஸ் தொடர்பான பல முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்பட இருக்கின்றன. (து)

எயிட்ஸ் நோய்க்கு எதிரான

# போராட்டத்தில் கருணையுடனும் திறந்த மனதுடனும் ஈடுபட வேண்டும்

## கோபி அனான் வேண்டுகோள்

(வாஷிங்டன்)
வருடாந்தம் 50 இலட்சம் பேரைப்பலி கொள்ளும் எயிட்ஸ் நோய்க்கு எதிரான போராட்டத்தில் கருணையுடனும் திறந்த மனப்பான்மையுடனும் நடந்து கொள்ளுமாறு ஐ நா. சபைபொதுச் செயலர் கோபி அனான் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையில் நடைபெற்றசர்வதேசஎயிட்ஸ் மகா நாட்டில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

மேற்படி நோயால் பீடிக்கப்பட்டவர்களை வேண்டா வெறுப்புடன் ஒதுக்குவதன் மூலம மாத்திரம் இவ் உயிர் கொல்லி நோயைக் கட்டுப்படுத்த முடியாது.

தவிர்க்க முடியாதவிபத்துச் சம்பவங்களின் மூலம் இந் நோய்த் தொற்றுக்குள்ளானவர்கள் அனேகமாக உள்ளனர்.

எனவே அவர்களது மனநிலையை உணர்ந்து நடப்பது அனைவரின் கடமையாகும என கோபி அனான் தெரிவித்துள்ளார். (உ-09)

மணிப்பூரில்

# மாணவதலைவர்கள்கைது கலவரத்தைதூண்டினராம்

(புதுடில்லி)
கடந்த வாரம் மணிப்பூரில் இடம் பெற்ற அரசுக்கெதிரான ஆர்ப்பாட்டங்களின் சூத்திர தாரிகள் என கருதப்படும் 12 மாணவத் தலைவர்களைப்கைது செய்துள்ளதாக மணிப்பூர் பொலிஸார் அறிவித்துள்ளனர்.

இம் மாணவத் தலைவர்கள் மணிப்பூரில்நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தின்போதுமாணவர்களைத் தூண்டி விட்டு அவர்களை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட வைத்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (உ-9

அரியவற்றுள் எல்லாம்
அரிதே பெரியாரைப் பேணித்
தமராக் கொளல்.

குறள்

## வலம்புரி

### வறுமை ஒழிப்பு அவசியம்!

வடக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் டக்ளஸ்தேவானந்தா 8ப0 இலட்சம் ரூபாவை யாழ்ப்பாணத்திற்கு எடுத்து வந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. வடபகுதியைப் புனரமைப்பதற்கான நிதி அரசினாலும், சர்வதேச பொது அமைப்புக்களினாலும் புனர்வாழ்வு அமைச்சிற்கு வழங்கப்பட்டு வருகிறது.

கடந்த இருபது வருடகாலமாக வடபுலத்து மக்கள் அனுபவித்து வரும் துன்பங்களும், சொத்திழப்புக்களும் கணக்கிட முடியாத அளவிற்கு எல்லை கடந்து விட்டது, ஒரு தடவை, இரு தடவையல்ல பல தடவைகள் வடபுலத்து மக்களின் சொத்துக்கள் அழிக்கப்பட்டுள்ளன. இளம் உழைப்பாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர். இதனால் அவர்களில் தங்கி வாழ்ந்த வயோதிபப் பெற்றோர்களும், பெண்களும் எதுவித வருமானமுமின்றி அரை வயிறு, கால் வயிறு எனப் பசியாற்றவே வககற்ற நிலையில்உள்ளனர்.

தனியொரு மனிதனுக்கு உணவில்லையெனில் இந்த ஜகத்தையே அழித்திடுவோமென்று குரல் எழுப்பிய பாரதியை ஒரு கணம் எண்ணிப் பார்க்கின் வடபுலத்து மக்கள் பசியால் வாடும் நிலை கண்டு கொதித்தெழுந்தால் இந்த ஜகத்தை எத்தனையோ தடவை அழித்திருக்க வேண்டும்.

சொந்த மண்ணை இழந்து இரவல் வீடுகளில் ஏச்சும், பேச்சும் என்ற நிலையில் எத்தனை நாட்கள் தான் வாழ முடியும் என்ற நிலையில் இடம் பெயர்ந்த மக்களின் மனம் புண்பட்டு விட்டது. இத்தகைய அவல நிலையைப் போக்குவதற்கு இடம் பெயர்ந்த, உயிரிழந்த, வீடழிந்து, தொழிலிழந்த மக்களை நோக்கியதாக புனர் வாழ்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

பாதிக்கப்பட்ட மக்களின் துன்பங்கள் என்று நீங்குகிறதோ- என்று நீக்கப்படுகிறதோ அன்று தான் இந்த மண்ணில் நிம்மதி பிறக்கும்.

வீடிழந்த எத்தனையோ மக்கள் முகாம்களில், ஓலைக் கொட்டில்களில் தம் வாழ்வை உள்ளத்து வெதும்பலுடன் கழிக்கின்றனர். மந்த போசாக்கினால் பாதிக்கப்பட்ட சிறார்கள், பள்ளிக்குச் செல்லாத மாணவர்கள் ஒரு நேர உணவுக்காக ஏங்கும் ஏழை வயோதிபர்கள் இப்படியே துன்பப் பட்டியல் நீள்கிறது இவை நீக்கப்பட வேண்டும்.

# முஸ்லிம் காங்கிரஸில் ஏற்பட்டுள்ள பிளவுநிலை

# ஆளும் கட்சி அவலம்; எதிர்க்கட்சி அகமகிழ்வு

ஆளும்பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் கூட்டணியிலிருந்துமுஸ்லிம்காங்கிரஸ்வெளியேற்றப் பட்ட சம்பவம் இலங்கை அரசியலில் ஒரு பரபரப்பை ஏற்படுத்தியுள்ளமை அனைவரும் அறிந்ததே. 1994 ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் இன்றைய ஆளுங் கட்சியுடன் கூட்டணியாகிப் போட்டியிட்ட ஸ்ரீலங்காமுஸ்லிம் காங்கிரஸ் தனது அப்போதைய சக்திமிக்க தலைமையின் கீழ் ஆட்சிக்காலம் முழுவதும் அரசின் பங்காளிக் கட்சியாக இருந்து ஒத்துழைத்து வந்தது. ஆனால் கடந்த ஆட்சிக் காலப் பிற்பகுதியில் ஆளுங்கட்சியான பொ.ஐ.மு- பங்காளிக்கட்சியான ஸ்ரீ மு காங்கிரஸிற்கிடையில் ஏற்பட்ட பிளவு கட்சியின் அன்றைய தனித்துவமான தலைவர் அஷ்ரப் அவர்களின் அரசியல் சாணக்கியத்தினால்அவ்வளவாகமுறுகலடையவில்லை. ஆனால் அஷ்ரப் அவர்களின் மறைவிற்கும் பின் படிப்படியாக பிளவுண்டா மு.கா: தனது தனித்துவத்தை இழந்து நிற்கிறது;

#### தேர்தலின் பின்னர்கட்சிகளின் நிலைப்பாடு

2000 ஆம் ஆண்டில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் பிளவுண்ட நிலையிலும் ஸ்ரீ:மு.கா.தே ஐ மு: ஆகிய இணைக் கட்சிகள் பதினொரு ஆதனங்களைக் கைப்பற்றிக் கொண்டன இத்தேர்தலில் பிரதான கட்சிகள் எவையும் அறுதிப் பெரும்பான்மை பெறாத நிலையில் சிறுபான்மைக் கட்சிகளின் தயவை நாடவே, தமிழ்க் கட்சிகளிடம் சுமார் 15 இற்கும் மேற்பட்ட ஆசனங்கள் இருந்தும் அவற்றின் ஒற்றுமையின்மை காரணமாக சுமார் 11 ஆசனங்களையே கொண்ட ஸ்ரீ மு கா. வின் உதவியுடன் பொ ஐ மு. ஆட்சிப்பீடம் ஏறியது. எனினும்நிபந்தனை

#### தம்பியண்ணா

யின் பெயரில் பல கோரிக்கைகளையும் அவை நிறைவேற்றக்காலக் கெடுவையும்விதித்த ஸ்ரீ.மு. காவை நிறைவேற்றப்படாத காலக்கெடு முடிவடைந்த நிலையிலும் நாளுக்கு நாள் சாட்டுகளைக் கூறியும் அரசியிலிருந்து கொண்டே அரசுக்கு 'பூச்சாண்டி' காட்டிக் கொண்டிருந்தது. இவற்றிற்கு மேலாக கல்முனை தனி மாவட்டம் என்ற மற்றுமோர் குண்டையும் அக்கட்சி தூக்கிப் போடவே, அரசு மிகவும் சினமடைந்தது. இந்த நிலையில் பிரதான எதிர்க்கட்சியான ஐ தே.க. வேறுசில எதிர்க்கட்சிகளின் ஆதரவுடன் பிரதம நீதியரசர், ஆளுங் கட்சி அமைச்சர் மற்றும் அரசுக்கெதிரான நம்பிக்கையில்லாபிரேரணைகளைக் கொண்டுவரப் பகீரதப்பிரயத்தனப்பட்டது. இதனால் அரசின் நிலைமை, மேலும் சிக்கலடையவே மு கா. தனது 'பூச்சாண்டியை' மேலும்மேலும் தூக்கி வைத்து மிரட்டவே மிக இக்கட்டான நிலையிலும் ஆளும் கட்சியான பொ ஐ மு. தவறான சில தகவல்களின் அடிப்படையில் அவசரப்பட்டு முஸ்லிம் காங்கிரஸின் ஒரு பகுதியினரை- அமைச்சர் ரவூப் ஹக்கீம் தலைமையிலானவர்களைத்திடீரெனவெளியேற்றியது.

#### சிறுகட்சிகளின் பலமும், பலவீனமும்

இவ்வெளியேற்றம் ஏதோ ஒரு வகையில்- அதாவது மு:கா: தானாகவே வெளியேறும் என அனைவரும் எதிர்பார்த்திருக்கையில், அரசு முந்திக் கொண்டமைகுறித்து பலகருத்துகள் நிலவுகின்றன. ஆயினும்மு கா வின்வெளியேற்றத்தை அடுத்து அமைச்சர் ரவூப் ஹக்கீமின் பின்திரண்ட சக்தியைக் கண்டுஅரசும்சற்று ஆடித்தான் போனது. இதனால் எதிர்க்கட்சியான ஐ.தே.க. படு குஷியாகி நம்பிக்கையில்லாத்தீர்மானத்தை நாடாளுமன்றில் சமர்ப்பிக்க உடனடி நடவடிக்கைகளை முடுக்கி விட்டது. எனினும் மு கா: வின் வெளியேற்றம் குறித்துஅரசும்அதன்சிரேஷ்ட அமைச்சர்கள் சிலரும் திருப்தி நிலையில் இருப்பதாயும், அம் முடிவிற்கு பாராட்டும், வரவேற்பும் கிடைத்தாயும்செய்திகள் தெரிவித்தன. இதற்கு பிரதான காரணம்மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி பி) யின் மதில்மேல் பூனைத்தனமே. இக் கட்சியும்ஸ்ரீ முகா வும் அண்மைக் காலங்களில் பலமான முறுகல் நிலை கொண்டிருந்தது எனவே ஜே வி பி யின் பத்து ஆசனங்கள் திடீரென மாபெரும் சக்தியாகி, ஆளும் எதிர்க் கட்சிகளை மாறி மாறி தன் காலடியில் விழ வைத்துக் கொண்டிருக்கிறது: இந்த நிலையில் தமிழ்க் கட்சிகள் அரசுக்கு ஆதரவாக-எதிராக இரண்டு மற்ற நிலையில் என பலதரப்பட்ட கோணங்களில் நிற்பதால் அவற்றின் வலிமை யாருக்கும் பெரிதாகதோன்றவில்லை;

#### அரசியலின் எதிர் விளைவு

இவை ஒரு புறமிருக்க இன்றைய அரசியல் மாற்றங்களின் விளைவுகளை கண்ணுற்ற பேரினவாதக் கடும்போக்குடையோரின் வியூகங்கள் பலரின் கவனத்தையும் ஏதோ ஒருவகையில் ஈர்த்துள்ளன,சிறுபான்மைக் கட்சிகளிடம்பணியும் நிலைமாற இருபிரதான கட்சிகளும் இணைந்து தேசிய அரசு ஒன்று அமைக்கும் திட்டமே அது எனினும் இத்திட்டம் கருத்தில் கொள்ளப்பட்டதாக தெரியவில்லை மறுபுறத்தே முஸ்லிம் மக்களிடையே பாரிய எதிர் விளைவுகள் ஏற்பட்டுள்ளன. அமைச்சர்கள், ரவூப்ஹக்கீம், பேரியல் அஷ்ரப்ஆகியோரின் தலைமையிலான மு கா,தே, ஐ.மு கட்சிகள் பிளவு பட்டு அவற்றின் பின் மக்கள் மாறி மாறி ஆர்ப்பாட்டம், ஹர்த்தால் எனமோதிக் கொள்கின்றனர். அரசு ரவூப் ஹக்கீமை வெளியேற்றியமையானது தமது கட்சிக்கு ஏற்பட்ட இழுக்கு என எதிரிகளாக இருந்த பலர் ரவூப் ஹக்கீமுடன் ஆதரவான சில நடவடிக்கைகளை மேற்கொண்டனர். ஆயினும் தனது தலைமையில் சுமார் மூன்று எம்பிகள் அரசுக்கு தொடர்ந்தும் ஆதரவு தரப் போவதாக பேரியல் அஷ்ரப் கூறுகிறார். அதுமட்டுமன்றி மு.காவின் தேசியப் பட்டியல் மூலமான இரு எம்பிக்களும் பதவிநீங்க வேண்டுமெனஜனாதிபதியின் எச்சரிக்கை வேறு இன்றேல் சட்ட நடவடிக்கை எடுக்கப் படுமாம்.

#### எல்லாம் அவன்(ர்) செயல்

எது எப்படியோ ஸ்ரீ.மு.கா வின்ஏழு எம்பிகள்இனிஎதிர்க் கட்சி வரிசையில் தான் இருப்பார்கள். நம்பிக்கையில்லாப் பிரேரணை வெல்வதும்தோற்பதும் இனி ஜே வி.பியின் முடிவில் தான் தங்கியுள்ளது. ஆட்சியமைத்து ஒரு வருடம் பூர்த்தியாகுமுன் அரசு கவிழும் நிலையில் வடகிழக்கு பகுதியிலே போர் மேகமும் சூழ்ந்துள்ளது இவ்வாறுநாட்டின் நிலை "கோவிந்தாவில்" இருக்க,வழமைபோல் ஸ்ரீமான் பொதுஜனமும் "அரோகராவில்" தவிக்க எங்கே ஆட்சி கவிழுமாயின் அரசு தந்திரோபாயமாக நாடாளுமன்றைக் கலைக்க-புதிய தேர்தல் வருமாயின், தமது பதவிகள் மீண்டும் கிடைக்குமா என்று ஏக்கத்தில் பலர் சாமியே... சரணம் ஐயப்பாவில் உள்ளனராம்.

### 102வது பிறந்தநாள் இன்று



இலக்கிய கலாநிதி பண்டிதமணி

### சி. கணபதிப்பிள்ளை

#### கழிநெடிலாசிரிய விருத்தம்

தேசமதுரச் செந்தமிழில்
சிவமணியி லொரு மணியாய்த்
திக்கெட்டும் போற்றி வாழ்த்தும்
செல்வமணி வானமேல்
திகழுஞ்சிந் தாமணி
திருமலியும் வைதிகமணி
தாமமோ டேடுகர வீணையிசை பாடுகலை
வாணியருள் கலைமாமணி
தகுமைந் தெழுத்துடன்
திருநீறு போற்றிடுஞ்
சைவசித் தாந்தமணியே

மாமதுரைத் தமிழ்ச் சங்க
மதிக்கின்ற யாழ்ப்பாண
மட்டுவி லூர்மாமணி
மணிவாச கர்போல
இக போகம் விட்டசிவ
மயமான நவமாமணி

நாமமது கலாநிதி
கணபதிப் பிள்ளையெனு
நாட்டிலுயர் கற்பகமணி
கடுநின்று தலைநின்ற
புகழ் கொண்ட புலவர்புகழ்
ஞானபண் டிதமணியே

முதுபெரும் புலவர்
வை. க. சிற்றம்பலம்

# மீன்பிடியியல் டிப்ளோமா கற்கைநெறி விண்ணப்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பல்கலைக்கழக மீன்பிடியியல் டிப்ளோமா 2000/2001 கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் தகுதியானவர்களிடம் இருந்து கோரப்பட்டுள்ளன.

க பொ. த உயர்தரத்தில் பழைய பாடத்திட்டமாயின் ஒரே அமர்வில் 180 புள்ளிகளுக்குமேல்பெற்றவர்களும், புதிய பாடத்திட்டமாயின் 3 பாடங்களிலும் 135 புள்ளிகளுக்கு மேலும் 4 வது பாடத்தில் 30 புள்ளிகளுக்கு குறையாமல் பெற்றவர்களும் இதற்கு விண்ணப்பிக்கமுடியும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களை அடுத்தமாதம் 20 ஆம் திகதிக்கு முன்னதாகஇணைப்பாளர், கடல்வள அபிவிருத்தி நிலையம், யாழ். பல்கலைக்கழகம் என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கடல்வள அபிவிருத்தி நிலைய இணைப்பாளர் பேராசிரியர் கா. சித்திரவடிவேல் தெரிவித்துள்ளார்.

(உ-6)

### கச்சாய் புனித இராயப்பர் திருவிழா

கொடிகாமம் கச்சாய்புனித இராயப்பர் ஆலயத்திருவிழா கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது. எதிர் வரும் 28ந்திகதி வியாழக்கிழமை பி.ப 4.30 மணிக்குநற்கருணைவிழாவும் 29ந் திகதி காலை 8.30 மணிக்கு திருவிழாத் திருப்பலியும்அதனைத்தொடர்ந்து புனிதரின் பவனியும், ஆசீரும் இடம் பெறும்.

## தமிழ்ப்பெண் மீது பாலியல் வல்லுறவு

# தமிழ் மக்கள் ஆயுதம் ஏந்துவதன் தேவையை உணர்த்தியுள்ளது!

### யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கண்டனம்

[யாழ்ப்பாணம்]

மருதானைப் பொலிஸ் சோதனைச் சாவாடியில் வைத்து இளம்பெண் ஒருவர் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்ட சம்பவத்தை யாழ்பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் வன்மையாகக் கண்டித்துள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தலைவர் செ.கஜேந்திரன் விடுத்த கண்டன அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

இத்தகைய காடைத்தனமான சம்பவங்கள் அரசகூலிப் படைகளால் நிகழ்த்தப்படுவது இதுமுதற்தடவையல்ல யாழ் குடாநாட்டிலும் பல இளம்பெண்கள் படையினரால் கற்பழிக்கப்பட்டு கொல்லப்பட்டுமுள்ளனர்.

எனினும் இச்சம்பவங்களுடன் தொடர்புடைய குற்றவாளிகள் இதுவரை தண்டிக்கப்படவில்லை.

இத்தகைய நிலைமைகள் தமிழ் மக்கள் தமது பாதுகாப்பிற்கு ஆயுதமேந்த வேண்டுமென்ற தேவைப்பாட்டினை உணர்த்தி நிற்கிறது.

இது விடயத்தில் அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் அக்கண்டன அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது [ந]

**ரவூப்--.**

பேரியல் அஷ்ரப் தவிர்த்துக்கொண்டதாகவும், ரவூப் ஹக்கீம் இக்கூட்டத்தில் கலந்து கொள்வதாலேயே தாம் இக்கூட்டத்தில் கலந்துகொள்வதைத் தவிர்த்துக்கொண்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

(க)

**புலிகளின் . . .**

கத்தைத் தோற்கடிப்பதற்கு நெடுங்காலமாகவே கூறிவந்துள்ளது.

புலிகள் மீதான தடை நீக்கத்துக்கு ஐ.தே கட்சி ஒரு போதும் ஆதரவு தெரிவிக்கவில்லை. தடை நீக்கக்கூடாது என்பதற்கான காரணங்களையே ஐ தே கட்சி வலியுறுத்தி வந்திருக்கிறது, என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். [ந-8]

**ஐ. சி. ஆர். சி . . .**

இரவு கொடிகாமத்தில் இருந்து சூட்டுக்காயங்களுடன் ஒப்படைக்கப்பட்ட ஒருவரின் சடலமுமே இவ்வாறு ஒப்படைக்கப்பட்டது.

மேற்படி 3 சடலங்களையும் செஞ்சிலுவைச் சங்கத்தினர் பொறுப்பேற்று இராணுவத்தினரின் உதவியுடன் குடாக்கடல் ஊடாக எடுத்துச் செல்லப்பட்டு புலிகளிடம் ஒப்படைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (உ-10-43)

## மிதுனராசியில் வியாழன் ஆட்சியை கவிழ்ப்பான்

### சோதிடர்கள் ஆரூடம்

மிதுனராசியில் வியாழபகவான் சஞ்சரிக்க வரும் வேளை இலங்கையரசியலில் ஏதோ ஒருவித குழப்பத்துடன் கூடிய ஆட்சிமாற்றமொன்று கடந்த காலங்களில் இருந்து ஏற்பட்டு வருகின்றதென்று சோதிடர்கள் தெரிவித்துள்ளனர். 12 ஆண்டுகளுக்கொரு தடவை மிதுன ராசியில் வியாழபகவான் சஞ்சரிப்பார். இக்காலத்தில் குழப்பத்துடன் கூடிய அரசியல் மாற்றங்கள் இலங்கையில் நடைபெற்றுள்ளது. 1953ம் ஆண்டு இடதுசாரிகளின் பாரிய ஊர்வலத்தினால் ஆட்சிக் குழப்பம் ஏற்பட்ட போது அமைச்சர்கள் பிரிட்டிஷ் கப்பல் ஏறி அடைக்கலம் கேட்ட வரலாற்றுச் சம்பவம் நடைபெற்றது அதையடுத்து தொடர்ந்த 12 ஆண்டுகளுக்குப்பின் 1965 ஆண்டு தமிழரசுக் கட்சியை உள்ளடக்கிய ஏழு கூட்டுக் கட்சிகள் ஆட்சியைக் கைப்பற்றியது. அதைத் தொடர்ந்து 12 ஆண்டுகளில் 1977 ஆம் ஆண்டு ஜே ஆர். ஜெயவர்த்தனா தலைமையிலான புதிய ஆட்சியும் கலவரமும் இடம் பெற்றது. தொடர்ந்த 12 ஆண்டுகளில் 1989 ஆம் ஆண்டு ஜனாதிபதி பிறேமதாசாவின் காலத்தில் ஜே.வி.பி. கலவரம் நடைபெற்றது தற்பொழுது 12 ஆண்டுகளின் பின்னர் 2001 ஆம் ஆண்டிலும் மிதுன ராசியில் வியாழ பகவான் சஞ்சரிக்கின்றார்.

இக்காலத்தில் இலங்கையில் பாரிய குழப்பத்துடன் ஆட்சி மாற்றமொன்று வருமென சோதிடர்கள் தெரிவிக்கின்றனர்.

(இ)

## அரசுக்கு எதிராக வாக்களிக்க

# பொ.ஜ ஐ. முன்னணி எம்பிக்களை விலைக்கு வாங்க ஐ.தே.கட்சி திட்டம்

(கொழும்பு)

அரசுக்கெதிராக ஐக்கிய தேசியக்கட்சி சமர்ப்பித்துள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை அடுத்த மாதம் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படும்போது, அரசுக்கெதிராக வாக்களிப்பதற்கு பொதுஜன ஐக்கிய முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர்களை விலைக்கு வாங்க ஐக்கிய தேசியக்கட்சி திட்டம் தீட்டியுள்ளதென்று, பொதுஜன ஐக்கிய முன்னணியின் முக்கிய அமைச்சர்கள் இருவர் குற்றம் சாட்டியுள்ளனர்.

நம்பிக்கையில்லாப் பிரேரணை வெற்றி பெறுவதற்கு ஐக்கியதேசியக்கட்சி ஐந்து பாராளுமன்ற உறுப்பினர்களை விலைக்கு வாங்க திட்டம் வகுத்துள்ளதென்று அமைச்சர்கள் டி.எம் ஜயரத்தின மற்றும் அத்தாவுட செனவிரத்தின ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

1964ம் ஆண்டு சுதந்திரக் கட்சியின் எம். பிக்களை விலைக்கு வாங்கி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் ஆட்சியைக் கவிழ்த்தது போன்று பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஆட்சியைக் கவிழ்க்க ஐக்கியதேசியக்கட்சி எம்பிக்களை விலைக்கு வாங்க திரைமறையில் திட்டம் வகுக்கலாமெனத் தாம் அஞ்சுவதாக, அமைச்சர் அத்தாவுட செனவிரத்தின தெரிவித்துள்ளதாக இணையதளமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கட்சி விட்டு கட்சி தாவும் 15 எம் பிக்கள் பொதுஜன ஐக்கிய முன்னணியில் உள்ளனரென ஐக்கியதேசியக் கட்சி தெரிவித்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (இ)

**ரெலோவின் . . .**

ஆட்சிபீடத்தில் அமர்த்த வேண்டுமென்ற ஆசை எமக்கில்லை. ஆனால், விடுதலைப் புலிகள் மீதான தடை நீக்கப்படுதல், அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துதல்: உடனடியாக யுத்தநிறுத்தம் செய்தல் ஆகிய மூன்றுகோரிக்கைகளையும் ஏற்று அதனை நடைமுறைப்படுத்த பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு முன்வருமானால் நாம் அரசுக்கு ஆதரவாக வாக்களிப்போம் என்றும் கூறினார்.

சுமார் 40லட்சரூபா செலவில் கட்டப்பட்ட இக்கட்டிடத் திறப்பு விழாவில் ரெலோவின் வன்னி மாவட்ட எம். பி கே. ஆர். புவனேஸ்வரன், பிரதி அமைச்சர் சுமதிபால, அரச அதிபர் கே. கணேஷ் ஆகியோர் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

நம்பிக்கையில்லாப் பிரேரணையில் ரெலோ எம். பிக்கள் கையொப்பமிட்டிருக்கும் இத்தருணத்தில், ரெலோவின் எம். பி வினோதலிங்கத்தின இப்பேச்சு அரசியல்வாதிகள் மத்தியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளதாக அரச அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர். (வ)


**தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்**

**கூட்டுறவு விழா**

**30-06-2001**

கூட்டுறவாளர்

**திரு. சின்னத்தம்பி சிவமகாராசா**

(பா. உ.) அவர்களின்

சேவைநலன் பாராட்டு விழாவும்

கூட்டுறவுத்தீபம் சிறப்பு மலர் வெளியீடும்

01. 07. 2001

கூட்டுறவுப் பெரியார்கள்

சங்கக் கூட்டுறவாளர்கள்

சங்கக் கூட்டுறவுப் பணியாளர்கள்

**கௌரவிப்பு விழா**

அன்பர்கள், ஆதரவாளர்கள், கூட்டுறவாளர்கள் அனைவரையும் வந்து கலந்து மகிழ்ந்து விழாவைச் சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

விழாச்சபையினர்.

தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கம்,
தெல்லிப்பழை.

(கி-2140)



**ராஜா**

யாழ்ப்பாணம்

லக்கிஸ்டார் அஜித்
(9 வேடங்களில்)
வசுந்தராதாஸ்,
மீனா, நக்மா
மற்றும் பலர் நடித்த
STR பிலிம்ஸ்

**சிட்டிசன்**

தினசரி: 10-30, 2-00
5 00 [பு. நே]

(கி-2125)



**நாகம்ஸ்**

(சுன்னாகம்)

விஜயகாந்,
மீனா
நடித்த

**சேதுபதி IPS**

தினசரி [ரீல்ஸ்]
11-00, 2-30 [பு. நே]
(சனி, ஞாயிறுதினங்களில்
6-30 மணிக்கு விசேட
காட்சி காண்பிக்கப்படும்

(3264)


## வாண்மை விருத்தி கருத்தரங்கு நாளை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட அதிபர்கள், மற்றும் கோட்டக்கல்வி அலுவலர்களுக்கு ஜீ. ரி. சற் நிறுவனத்தின் அனுசரணையுடனான வாண்மை விருத்திச் செயலமர்வு நாளை வியாழக்கிழமை ஆரம்பமாகுமென்று மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் கலாநிதி எஸ். என். தணிகாசலம்பிள்ளை அறிவித்துள்ளார்.

இச் செயலமர்வு வடமராட்சி, தென்மராட்சி, தீவகம், வலிகாமம், மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய ஐந்து கல்வி வலயங்களிலும் நடைபெறும். செயலமர்வுக்கான அழைப்புக் கடிதங்கள் சம்பந்தப்பட்டோருக்கு வலயக் கல்விப் பணிப்பாளர் ஊடாக அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

செயலமர்வுகள் மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளரின் தலைமையின் கீழ், ஜீ ரி. சற் செயற்திட்ட அலுவலர்கள் வே. உமாமகேஸ்வரன், திருமதி சி நடராஜா ஆகியோரின் கண்காணிப்பின் கீழ் நடத்தப்படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(இ)




மின்னிடும் அசல் 22 கரட் தங்கநகைகளை உங்கள் எண்ணம்போல் தெரிவுசெய்திட

**நியூ நகுலா ஜுவல்லறி**

74, கஸ்தூரியார் வீதி, - - - யாழ்ப்பாணம்.

**நியூ லலிதாஸ் ஜுவல்லறி**
171, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

[கி-3137]

**நகுலா நகைமாடம்**
241G, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


இப் பத்திரிகை "வலம்புரி" அன்கோ ஸ்தாபனத்தாரால் இல. 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2001ம் ஆண்டு யூன் மாதம் 27-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.